# சமூக அறிவியல்

## எட்டாம் வகுப்பு

### இரண்டாம் பருவம்

# 1. இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி (கி.பி.1773–கி.பி.1857)

### வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு (கி.பி.1772–கி.பி.1785)

கி.பி.1772இல் வங்காள கவர்னராக வாரன் ஹேஸ்டிங்ஸ் நியமிக்கப்பட்டார். பிறகு வங்காளத்தின் தலைமை ஆளுநரானார். இவர் ஆட்சியின்போது கி.பி.1772இல் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்தினால் மக்கள் பெரும் துயரத்திற்கு உள்ளானார்கள். இரட்டை ஆட்சி முறை வங்காளத்தில் பொருளாதார நிலையைச் சீர்குலையச் செய்தது. விவசாயிகளும், கலைஞர்களும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆங்கிலக் கிழக்கு இந்தியக் கம்பெனி அதிகாரிகள் தங்களுடைய உரிமையைத் தவறாகப் பயன்டுத்தி நிறைய சொத்து சேர்த்துக் கொண்டனர். கம்பெனியின் நிர்வாகம் சீர்குலைந்தது. இந்நிலையில் கம்பெனி ஆங்கில அரசிடம் பெரும் தொகையைக் கடனாகக் கேட்டது. இச்சமயத்தில், ஆங்கில அரசு, கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தில் நேரிடையாகத் தலையிட வேண்டியதாயிற்று. எனவே ஆங்கிலப் பாராளுமன்றம் கி.பி.1773இல் ஒழுங்கு முறைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. இந்தச் சட்டமானது இந்திய அரசியல் அமைப்பின் வளர்ச்சிக்கு முதல் படியாக அமைந்தது.

### ஒழுங்குமுறைச் சட்டத்தின் சரத்துகள்

- சென்னை மும்பை ஆளுநர்களுக்கு மேலாக வங்காளத்தில் தலைமை ஆளுநர் நியமனம்.
- கொல்கத்தாவில் ஒரு தலைமை நீதிபதி மற்றும் மூன்று நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்றம் அமைக்க வழி செய்யப்பட்டது. (எலிஜா இம்பே முதல் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார்).
- தலைமை ஆளுநருக்கு உதவி புரிய நான்கு உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகக் குழு அமைத்தல்.

### ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைகள்

உச்சநீதி மன்றம், தலைமை ஆளுநர் மற்றும் அவரது நிர்வாகக் குழு உறுப்பினர்களது அதிகார எல்லை இச்சட்டத்தால் வரைமுறை செய்யப்படவில்லை. தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழு உறுப்பினர்களிடையே அடிக்கடி பூசல் ஏற்பட்டது. சென்னை, மும்பை ஆளுநர்கள், வங்காளத் தலைமை ஆளுநரது ஆணைகளுக்குக் கட்டுப்படவில்லை. இந்தச் சட்டம் தலைமை ஆளுநரது நிலையை மோசமடையச் செய்தது. இந்தச் சட்டத்தின் குறைகளைப் போக்குவதற்காகக் கி.பி.1784 ஆம் ஆண்டு, ஆங்கிலப் பிரதமர் இளைய பிட் என்பவர், பிட் இந்தியச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

### பிட் இந்தியச் சட்டத்தின் சரத்துகள்

இங்கிலாந்து அரசின் பரிந்துரையின் படி தலைமை ஆளுநர் நியமிக்கப்படுவார் எனக் கூறப்பட்டது. நிர்வாகக் குழு உறுப்பினர் எண்ணிக்கை, நான்கிலிருந்து மூன்றாகக் குறைக்கப்பட்டது. நிர்வாக வளர்ச்சிக்காக 6 பேர் கொண்ட கட்டுப்பாட்டுக் குழு இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள ஆங்கிலப் படை வீரர்களுக்குப் படைத்தளபதியாக தலைமை ஆளுநர் செயல்படுவார் என்றும் சென்னை மும்பை மாகாணங்கள் அவரின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ்

கொண்டுவரப்படும் எனவும் ஆங்கில அரசின் கீழ் கம்பெனியின் நிர்வாகம் செயல்படவும் இச்சட்டம் வழி வகுத்தது.

### வாரன் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்கள்

### நிர்வாகச் சீர்திருத்தம்

இராபர்ட் கிளைவ் வங்காளத்தில் ஏற்படுத்திய இரட்டை ஆட்சி முறையை ஒழித்தார். மாகாணங்களின் நிர்வாகத்தை, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஏற்றுக் கொண்டது. அரசின் கருவூலம் முர்ஷிதாபாத்தில் இருந்து கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டது.

### நீதித்துறைச் சீர்திருத்தம்

கல்கத்தாவில் சாதர் திவானி அதாலத் (சிவில்), சாதர்நிஜாமத் அதாலத் (கிரிமினல்) என்ற இரு நீதி மன்றங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும், சிவில் மற்றும் கிரிமினல் நீதி மன்றங்கள் உருவாக்கப்பட்டன. இந்து, முஸ்லீம் சட்டத் தொகுப்பு உருவாக்கப் பட்டது.

### வணிகச் சீர்திருத்தங்கள்

கம்பெனி தரமான பொருள்களை வாங்க, வணிகக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. கம்பெனி ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டது. இந்திய வாணிகத்தை ஊக்குவிக்க வியாபாரிகளுக்குச் சுங்க வரியில் 2.5% தள்ளுபடி அளித்தார். பிற சுங்கச் சாவடிகளை ஒழித்து கல்கத்தா, டாக்கா, ஹூக்ளி, பாட்னா, முர்ஷிதாபாத் ஆகிய ஐந்து இடங்களில் சுங்கச் சாவடிகளை ஏற்படுத்தினார்.

### வருவாய்ச் சீர்திருத்தம்

வருவாய்த்துறையை மேம்படுத்த கொல்கத்தாவில் வருவாய்த் துறைக் கழகம் நிறுவப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் ஆங்கிலக் கலெக்டர் நியமிக்கப்பட்டார். நிலம் குத்தகை அடிப்படையில் அதிக தொகைக்கு ஏலம் எடுப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர் அந்த நிலத்தில் இருந்து ஐந்து ஆண்டுகளுக்கு நிலவரியைப் பெற்று அரசுக்குச் செலுத்த வேண்டும்.

### கல்விச் சீர்திருத்தம்

வாரன் ஹேஸ்டிங்ஸ் கல்வியை மிகவும் ஆதரித்தார். இஸ்லாமிய கல்வி வளர்ச்சிக்காகக் கி.பி.1781 இல் கல்கத்தாவில் மதரஸா கல்வி நிறுவனத்தைத் துவக்கினார்.

### ரோஹில்லாப் போர் (கி.பி.1774)

ரோஹில்லர்கள் ஆப்கானிய மக்கள் ஆவார். இவர்கள் மராத்தியர்களின் தாக்குதலுக்கு ஆளாயினர். அதனால் அவர்கள் அயோத்தியின் நவாப் ஷூஜா–உத்–தௌலாவின் உதவியை நாடினார். இதற்காக 40 இலட்சம் ரூபாய் கொடுக்க ஒப்புக்கொண்டனர். கி.பி.1773 இல் மராத்தியர்கள், ரோஹல்கண்ட் மீது படையெடுத்த போது அயோத்தி நவாபின் படைகள் ரோஹில்லர்களுக்குப் பக்கபலமாக இருந்தன. அதனால் மராத்தியர்கள் போரிடாமல் திரும்பிச் சென்றனர். ஆனால் ஒப்பந்தப்படி ஷூஜா–உத்–தௌலா, 40 இலட்சம் கேட்கவே ரோஹில்லர்கள் போர் ஏதும் நிகழாததால் அப்பணத்தைத்தர மறுத்தனர். உடனே அயோத்தி நவாப் ஆங்கிலேயர்களின் உதவியை நாடினார். அவ்வாறு ஆங்கிலேயர்கள் உதவினால் தான் 40 இலட்சம் அவர்களுக்குத் தருவதாக ஒப்புக்கொண்டார். எனவே வாரன் ஹேஸ்டிங்ஸ் தனது படையை அனுப்பி ரோஹில்லர்களைத் தோற்கடித்தார். ரோஹில்கண்ட் அயோத்தியுடன் இணைக்கப்பட்டது.

## இரண்டாவது ஆங்கில–மைசூர்ப் போர் (கி.பி.1780–கி.பி.1784)

கி.பி.1769இல் மதராஸ் உடன்படிக்கை ஹைதர் அலிக்கும், ஆங்கிலேயருக்கும் இடையே ஏற்பட்டது. இதன்படி ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வது என்று முடிவாயிற்று. ஆனால் கி.பி.1771இல் மராத்தியர்கள், மைசூர் மீது படையெடுத்தபோது ஆங்கிலேயர்கள் ஹைதர் அலிக்கு உதவ முன்வரவில்லை. மேலும் ஹைதர் அலிக்கு முக்கிய பகுதியாக விளங்கிய பிரெஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்த மாஹியை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். இச்செயலை ஹைதர் அலி எதிர்த்தார். ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போர் தொடங்கினார்.

ஹைதர் அலி கி.பி.1780இல் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் தொடுத்தார். கி.பி.1781இல் போர்ட்டோ நோவோ என்ற இடத்தில் ஆங்கிலேய படைத் தளபதியான சர் அயர் கூட், ஹைதர் அலியைத் தோற்கடித்தார். கி.பி. 1782 ஆம் ஆண்டு ஆரணி என்ற இடத்திலும் மீண்டும் ஹைதர் அலி தோற்கடிக்கப்பட்டார். இதற்கிடையே ஹைதர் அலி புற்று நோயால் இறந்தார். எனவே அவரது மகன் திப்பு சுல்தான் போரைத் தொடர்ந்தார். போரை விரும்பாத திப்பு சுல்தான் கி.பி.1784இல் மங்களூர் உடன்படிக்கையின்படி போரினை முடிவுக்குக் கொண்டுவந்தார். அதன்படி இரு சாராரும் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளைத் திரும்ப அளிக்க ஒப்புக் கொண்டனர்.

## முதலாம் ஆங்கில–மராத்தியப் போர் கி.பி.1775–கி.பி.1782

வாரன்ஹேஸ்டிங்ஸ் மராத்தியர் களுக்கு எதிராக கி.பி.1775 இல் போர் தொடுத்தார். கி.பி.1782 இல் சால்பை உடன்படிக்கை மூலம் போர் முடிவடைந்தது. இதன்படி மாதவராவ் பீஷ்வாவாகப் பொறுப்பேற்றார்.

## வாரன்ஹேஸ்டிங்ஸின் குற்ற விசாரணை

முதலாவது ஆங்கிலேய மராத்திய போருக்குப் பின் ஆங்கிலேயர்களுக்குப் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டது. எனவே வாரன் ஹேஸ்டிங்ஸ் பனாரசை ஆண்ட மன்னர் செயித்சிங்கிடம் அதிக வரிப்பணம் கோரினார். அம்மன்னர் பணம் கொடுக்க மறுத்தார். எனவே வாரன்ஹேஸ்டிங்ஸ் அவரை பதவியிலிருந்து நீக்கினார். மேலும் அயோத்தி பேகங்களின் செல்வத்தினையும் வாரன்ஹேஸ்டிங்ஸ் கைப்பற்றினார். பொய்க் கையெழுத்துப் போட்ட விவகாரத்தில் நந்தகுமார் கொலை செய்யப்பட்டார். இச்செயல்களுக்காக வாரன் ஹேஸ்டிங்ஸ் குற்ற விசாரணைக்கு உட்படுத்தப் பட்டார். குற்ற விசாரணையின் முடிவில் அவர் குற்றமற்றவர் எனக் கருதியும் அவர் இந்தியாவில் ஆங்கில அதிகார வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் கருதியும் பாராளுமன்றம் அவரை விடுவித்தது.

## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காளக் கவர்னராக நியமிக்கப்பட்ட ஆண்டு__________ஆகும்.

   அ) 1772 ஆ) 1773 இ) 1774

2. பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் தலைமை நீதிபதியாக இருந்தவர் __________ ஆவார்.

   அ) சர் தாமஸ் ஆ) சர் எலிஜா இம்பே இ) சர் மோர்ஸ்

3. ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி உச்ச நீதிமன்றம் அமைக்கப்பட்ட இடம் __________ ஆகும்.

   அ) கல்கத்தா ஆ) மதராஸ் இ) பம்பாய்

4. ஹைதர் அலியின் மகன் __________ ஆவார்.

   அ) தோஸ்து அலி ஆ) மீர் காசிம் இ) திப்பு சுல்தான்

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கி.பி.1772 ஆம் ஆண்டு இந்தியாவில் கடுமையான பஞ்சம் தாக்கிய பகுதி __________ ஆகும்.
2. ஆங்கிலப் பிரதமர் __________ என்பவரால் கி.பி.1784 ஆம் ஆண்டு பிட் இந்தியச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
3. வாரன் ஹேஸ்டிங்ஸ்சால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட இரட்டை ஆட்சியை நிறுவியவர் __________.
4. இரண்டாம் ஆங்கில–மைசூர்ப் போர் __________ உடன்படிக்கையின்படி முடிவுக்கு வந்தது.

### III) பொருத்துக.

1. அயோத்தி நவாப் – சிவில் நீதிமன்றம்
2. ஹைதர் அலி – பனாரஸ் மன்னர்
3. சாதர் திவானி அதாலத் – மைசூர் அரசர்
4. இராஜா செயித் சிங் – ஷுஜா–உத்–தௌலா

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. கி.பி.1773இல் ஆங்கிலேய பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் பெயரினைக் கூறுக.
2. ஒழுங்கு முறைச் சட்டத்தின் குறைகளைப் போக்கிய சட்டம் எது ?
3. தரமான பொருட்களை வாங்க, ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி எவ்வமைப்பினை ஏற்படுத்தியது ?

## V) குறுகிய விடையளி.

1. ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைகள் யாவை ?
2. கி.பி.1780–ஆம் ஆண்டு ஹைதர் அலி ஆங்கிலேயர் மீது ஏன் படையெடுத்தார் ?
3. “ரோஹில்லாப் போர்” குறிப்பு வரைக.

## VI) விரிவான விடையளி.

1. வாரன் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்களை விவரி ?
2. ஒழுங்குமுறைச் சட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை ?
   ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைகளை எவ்வாறு பிட் இந்தியச் சட்டம் நிவர்த்தி செய்தது ?

## உருவாக்க மதிப்பீடு

1. **விவாதம்**

   கி.பி. 1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம் இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு முதல்படி – வகுப்பறையில் விவாதிக்கவும்.

2. வாரன் ஹேஸ்டிங் பிரபு மற்றும் அவரின் சீர்திருத்தங்கள் பற்றிய படங்களைச் சேகரித்து, துணுக்குப் புத்தகத்தில் ஒட்டவும்.

3. 1770 முதல் 1872 வரை வங்காளத்தில் ஏற்ப்பட்ட பஞ்சங்கள் குறித்து கட்டுரை எழுதுக.

## 2. காரன்வாலிஸ் பிரபு (கி.பி. 1786–கி.பி.1793)



காரன்வாலிஸ் பிரபு

காரன்வாலிஸ் பிரபு கி.பி.1786 ஆம் ஆண்டு இந்தியாவின் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் இந்தியாவில் இருந்த சுதேசி சாம்ராஜ்யத்தில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்ற முயன்றார்.

1793 ஆம் ஆண்டு காரன் வாலிஸ் பிரபு நிலையான நிலவரித் திட்டத்தை வங்காளத்தில் அறிமுகப்படுத்தினார். இதன்படி ஜமீன்தார்கள் நிலவரியாக அவர்கள் வசூலிப்பதைக் கருத்தில் கொள்ளாமல் ஒரு குறிப்பிட்ட தொகையை பணமாக கருவூலத்தில் செலுத்தவேண்டும். அவர்கள் குறிப்பிட்ட தொகையை மட்டுமே கட்டவேண்டும் என்பதால். அதிகப்படியான நிலங்களை விவசாயத்தின்கீழ் கொண்டுவந்து அதிக பணம் சம்பாதித்தனர். இம்முறையினால் ஜமீன்தார்களே விவசாயிகளை விட அதிக லாபம் அடைந்தனர்.

### நன்மைகள்

இத்திட்டம் ஜமீன்தாரர்களுக்குப் பெரும் நன்மையை அளித்தது. ஜமீன்தாரர்கள் நிலத்தின் சொந்தக்காரர்கள் ஆனார்கள். இதனால் ஆங்கில ஆட்சிக்கு விசுவாசிகளானார்கள். ஜமீன்தாரர்கள் அதிக நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படும்படியாகக் கொண்டுவந்தனர். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு நிலையான வருமானம் ஆண்டுதோறும் கிடைத்தது. நிலையான வருமானம் கிடைத்ததால் சீரான நிர்வாகம் நடைபெற்றது. ஆண்டுதோறும் நடைபெறுகின்ற வரி நிர்ணய முறையினால் வரக்கூடிய தீமைகள் அகற்றப்பட்டன.

### தீமைகள்

- ஜமீன்தார்கள் அதிக லாபம் அடைந்தனர்.
- விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளானார்கள். ஜமீன்தார்களின் கருணைப் பார்வையில் வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.
- அதிகரித்து வந்த அரசின் செலவிற்காக அரசாங்கம் மற்ற மாநிலங்களிலும் வரியை உயர்த்தின.
- அரசாங்கம் மக்களோடு கொண்டிருந்த நேரடித் தொடர்பை இழந்தது.

### நிர்வாகச் சீர்திருத்தங்கள்

காரன்வாலிஸ் பிரபு இந்தியாவில் குடிமைப் பணியினர் மூலம் ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான நிலப்பகுதிகளை ஆட்சி செய்யும் முறையினை அறிமுகப்படுத்தினார். இதனால் இவர் இந்தியக் குடிமையியல் பணியின் தந்தை என்றழைக்கப்பட்டார். அலுவலர்களின் ஊதியத்தை உயர்த்தி தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்கினார். கம்பெனி ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்வதைத் தடைசெய்தார். எல்லா உயர்பதவிகளும் ஆங்கிலேயர்களுக்கே ஒதுக்கப்பட்டது. இந்தியர்கள் துணை நிலை அலுவலர்கள் பதவிகளுக்கு மட்டுமே தேர்வு செய்யப்பட்டனர்.

## காவல் துறைச் சீர்திருத்தம்

காரன்வாலிஸ் இந்தியாவில் நிலையான காவல்துறையை உருவாக்கினார். கி.பி.1791 ஆம் ஆண்டு கல்கத்தாவில் காவல்துறை ஆணையர் நியமனம் உருவாக்கப்பட்டது. மாவட்டங்கள் பல்வேறு தானாக்களாகப் பிரிக்கப் பட்டது. அவைகள் தரோகா என்ற அதிகாரியினால் நிர்வகிக்கப்பட்டன. ஆட்சித் துறையைப் போல காவல் துறையிலும் இந்தியர்கள் உயர்பதவியில் நியமிக்கப்படவில்லை.

## நீதித்துறைச் சீர்திருத்தங்கள்

காரன்வாலிஸ் பிரபு நீதித்துறையில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தார். மாவட்ட ஆட்சியர், நீதிப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். வருவாய்த்துறை பொறுப்பு மட்டுமே அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பொது மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் மாவட்டம் தோறும் உருவாக்கப்பட்டன. நான்கு மாகாண நீதி மன்றங்கள் முறையே டாக்கா, கல்கத்தா, முர்ஷிதாபாத் மற்றும் பாட்னாவில் ஏற்படுத்தப்பட்டன. நீதிபதிகளிடையே கையூட்டினை அகற்ற மாதச்சம்பளத்தினை அதிகப்படுத்தினார். நீதிமன்றங்களுக்குக் கட்டவேண்டிய கட்டணங்களை ரத்து செய்தார். கி.பி.1793 ஆம் ஆண்டு "காரன் வாலிஸ் சட்டத் தொகுப்பினைச்" சர் ஜார்ஜ் பார்லோ என்பவர் தொகுத்து வெளியிட்டார்.

## வருவாய்ச் சீர்திருத்தங்கள்

காரன்வாலிஸ் வருவாய்துறையைத் திருத்தி அமைத்தார். கி.பி.1787 இல் வங்காளம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒரு ஆட்சியரின்கீழ் நிர்வகிக்கப்பட்டது. காரன்வாலிஸ் வருவாய்த்துறையை உருவாக்கி, ஆட்சியர்களின் செயல்பாட்டினை மேற்பார்வையிடச் செய்தார்.

## வணிகச் சீர்திருத்தங்கள்

காரன்வாலிஸ் ஆங்கிலேயர்கள் இந்திய வியாபாரிகளோடு நேரிடையாகப் பொருள் வாங்கும் அல்லது விற்கும் முறையினை மீண்டும் அறிமுகப்படுத்தினார். இதன் மூலம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வியாபாரத்தினைப் பெருக்கினார்.

## திப்பு சுல்தான்

திப்பு சுல்தான், ஹைதர் அலியின் மகனாகக் கி.பி.1753 ஆம் ஆண்டு மைசூர் அருகே பிறந்தார். தந்தையைப் போன்ற சிறந்த நிர்வாகியாகவும், போர் வீரராகவும் விளங்கினார். ஆங்கிலேயர்கள் இந்தியாவில் ஆட்சி செய்வதைக் கடுமையாக எதிர்த்தார். நாட்டினைப் பாதுகாக்க வலிமை மிகுந்த கோட்டைகளை உருவாக்கினார். நீலகிரியிலுள்ள தூர்க் கோட்டை அவரின் புகழ் பெற்ற கோட்டை ஆகும். திப்பு சுல்தான் "மைசூரின் புலி" எனப் பெருமையோடு அழைக்கப்படுகிறார். புலி, திப்புவின் அன்பிற்குரிய மிருகமாகும். அவரின் அரியணையிலும், இராணுவச் சீருடையிலும் புலியின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. தந்தையைப் போன்றே இவரும் இறந்தபின் சீரங்கப்பட்டினத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.



திப்பு சுல்தான்

## வெளிநாட்டுக் கொள்கை

## மூன்றாவது ஆங்கில–மைசூர் போர் (கி.பி.1790–கி.பி.1792)

இரண்டாவது ஆங்கிலேய மைசூர்ப் போரின் முடிவில் திப்பு சுல்தானும், ஆங்கிலேயர்களும் தங்களுடைய அரசியல் ஆதிக்கத்தை தக்காணத்தில் நிலை நிறுத்த முயன்றனர். திப்பு சுல்தான் தன்னைப் பலப்படுத்திக் கொண்டு பிரான்சு மற்றும் துருக்கியின் உதவியோடு ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்ற எண்ணினார். இதனை அறிந்த காரன்வாலிஸ் ஹைதராபாத் நிஜாம் மற்றும் மராத்தியரின் துணையோடு திப்புவை எதிர்க்கத் திட்டமிட்டார். இந்நிலையில் திப்பு சுல்தான் ஆங்கிலேயரின் நட்பு நாடான திருவாங்கூரைத் தாக்கினார். எனவே, கி.பி.1790 ஆம் ஆண்டு காரன்வாலிஸ் திப்பு சுல்தானுக்கு எதிராகப் போர் தொடுத்தார். ஆங்கிலப்படை பெங்களூரைக் கைப்பற்றி சீரங்கப்பட்டினத்திற்கு அருகே திப்பு சுல்தானைத் தோற்கடித்தது.

கி.பி.1792 ஆம் ஆண்டு கையொப்பமான **"சீரங்கப்பட்டின அமைதி ஒப்பந்தம்"** மூன்றாவது மைசூர் போரினை முடிவுக்கு கொண்டு வந்தது.

## வெல்லெஸ்லி பிரபு (கி.பி.1796–கி.பி.1805)

காரன்வாலிஸ் பிரபுவைத் தொடர்ந்து சர் ஜான்ஷோர் வங்காளத்தின் கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்று தலையிடாக் கொள்கையைப் பின்பற்றி ஆட்சி செய்தார். இவரைத் தொடர்ந்து வெல்லெஸ்லி பிரபு கவர்னர்ஜெனரலாகப் பதவியேற்றார். இவர் இந்தியாவில் ஆங்கிலப் பேரரசை உருவாக்க, பேரரசுக் கொள்கையைப் பின்பற்றினார். துணைப்படைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி ஆங்கிலப் பேரரசை நிலை பெறச் செய்தார்.



வெல்லெஸ்லி பிரபு


## துணைப் படைத்திட்டம்

வெல்லெஸ்லி துணைப்படைத் திட்டத்தின் மூலம் இந்தியாவில் ஆட்சி செய்து வந்த சுதேச சாம்ராஜ்யங்களை ஆங்கில அரசாட்சியின் கீழ் கொண்டுவர எண்ணினார்.

## முக்கிய கூறுகள்

துணைப்படைத் திட்டத்தின் படி இந்திய சுதேச அரசர்கள் தங்களது நாட்டில் ஆங்கிலப் படை ஒன்றை அதன் நிர்வாகச் செலவிற்கான பணத்தைச் செலுத்தியோ, தங்கள் நிலப் பகுதிகளில் சிலவற்றை ஆங்கிலேயர்களுக்கு கொடுப்பதன் மூலமாகவோ பராமரிக்க வேண்டும். இந்திய சுதேச அரசர்கள் பிற நாடுகளோடு போரிடவோ அமைதி ஒப்பந்தங்களில் கையெழுத்திடவோ

## வெல்லெஸ்லி பிரபுவின் கீழ் ஆங்கிலப் பேரரசு



கூடாது. துணைப்படைத் திட்டத்தினால் ஆங்கிலேயர்கள் இந்திய சுதேச அரசர்களின் செலவில் பெரும்படை ஒன்றைப் பராமரிக்க வழி வகுத்தது.

### நன்மைகள்

இந்திய சுதேசி அரசுகளின் பணப்பயன்பாட்டின் அடிப்படையில் ஆங்கில அரசு தனது பெரும் படையினைப் பராமரித்தது. ஆங்கில அரசின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டதால் அந்நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையை இங்கிலாந்து கட்டுப்படுத்தியது. பிரான்ஸ் நாட்டின் ஆதிக்கம் இந்தியாவிலிருந்து முற்றிலுமாக அகற்றப்பட்டது. இந்தியாவில் ஆங்கிலப் பேரரசு விரிவுபடுத்தப்பட்டது.

### தீமைகள்

சுதேசி மன்னர்கள் தங்களுடைய அதிகாரத்தையும், கவுரவத்தையும் இழந்தனர். சுதேசி மன்னர்களும், ஆங்கிலேயர்களும் மக்களின் நலனை புறக்கணித்தனர்.

### துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள்

வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் இந்திய மன்னர் ஹைதராபாத் நிஜாம் ஆவார். இவர் பெல்லாரி, கடப்பா, அனந்தபூர் மற்றும் கர்னூல் ஆகிய நிலப்பகுதிகளை ஆங்கிலேயருக்கு அளித்தார். அயோத்தியை ஆண்ட நவாப்பை வெல்லெஸ்லி கட்டாயப்படுத்தி துணைப்படைத் திட்டத்தை ஏற்கச் செய்தார். ரோஹில்கண்ட், கோரக்பூர் மற்றும் கங்கை யமுனை நதி களுக்கு இடையே உள்ள நிலப்பகுதிகளை ஆங்கில அரசிடம் அளித்தார். பேஷ்வா இரண்டாவது பாஜிராவ் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டார். பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டபோதிலும் மைசூரை ஆண்ட திப்புசுல்தான் துணைப் படைத்திட்டத்தை ஏற்க மறுத்தார்.

### நான்காவது ஆங்கில–மைசூர்ப் போர் (கி.பி.1799)

துணைப்படைத்திட்டத்தைத் திப்பு சுல்தான் ஏற்க மறுத்து, ஆங்கிலேயர்களைப் பழிவாங்க எண்ணினார். மேலும் தான் இழந்த நிலப் பகுதிகளை திரும்பப் பெறவும் எண்ணினார்.

திப்பு சுல்தான் பிரான்ஸ், காபூல், கான்ஸ்டான்டிநோபிள், அரேபியா ஆகிய நாடுகளின் உதவி பெற்று, ஆங்கிலேயர்களை எதிர்க்க அந்நாடுகளுக்குத் தூதுவர்களை அனுப்பினார். எனவே போர் தவிர்க்க முடியாத ஒன்றாகியது.

கி.பி.1799 ஆம் ஆண்டு மாளவள்ளி போரில் திப்பு சுல்தான் தோற்கடிக்கப்பட்டார். சீரங்கப்பட்டினக் கோட்டையைக் காக்க முயன்றபோது மே 4 ஆம் நாள் கி.பி.1799 ஆம் ஆண்டு கொல்லப்பட்டார், இவரின் மறைவோடு போர் முடிந்தது.

### விளைவுகள்

இப்போரின் முடிவில் ஆங்கிலேயர்கள் சீரங்கப்பட்டினம், கோயம்புத்தூர், கனரா போன்ற நிலப்பகுதிகளை இணைத்துக் கொண்டனர். மைசூர் அரசு பழைய இந்து வம்ச மன்னர் குடும்பத்தில் பிறந்த கிருஷ்ணா என்பவரிடம் திரும்ப அளிக்கப்பட்டது. திப்புவின் குடும்பத்தினர் வேலூருக்குக் கைதிகளாக அனுப்பப்பட்டனர். தென்னிந்தியாவில் ஆங்கிலேயர்கள் வலிமை வாய்ந்த சக்தியாக உருவானார்கள்.

## இரண்டாவது ஆங்கிலேய மராத்தியப் போர் (கி.பி.1803)

இரண்டாம் பாஜிராவ் ஆங்கிலேயரின் துணைப்படைத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு பஸ்ஸின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டார். ஆனால் மராத்திய தேசத் தலைவர்கள் சிந்தியாவும், பான்ஸ்லேயும் இந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தனர். ஆங்கிலேயர்களை எதிர்க்க முனைந்தனர். இது இரண்டாம் ஆங்கிலேய–மராத்திய போருக்கு முக்கிய காரணமாகும். தளபதி ஆர்தர் வெல்லெஸ்லி கி.பி.1803இல் அசே மற்றும் ஆரிகான் ஆகிய இடங்களில் மராத்தியர்களைத் தோற்கடித்தார்.

## மதிப்பீடு

சிறந்த தளபதியான வெல்லெஸ்லி வணிக நிறுவனமாக விளங்கிய ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தை இந்தியாவில் வலிமை மிகுந்த ஓர் அரசியல் சக்தியாக மாற்றியமைத்தார்.

## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. காரன்வாலிஸ் பிரபு ____________ ஆம் ஆண்டு வங்காளத்தின் கவர்னர்–ஜெனரல் ஆனார்.

   அ) 1786    ஆ) 1787    இ) 1788

2. மூன்றாவது ஆங்கிலேய–மைசூர்ப் போரின் போது திப்பு சுல்தான் தென்னிந்தியாவிலிருந்த ____________ நாட்டைச் சார்ந்த இந்து அரசரைத் தாக்கினார்.

   அ) அயோத்தி    ஆ) திருவாங்கூர்    இ) கர்நாடகம்

3. இந்தியப் பொதுக் குடிமையியல் பணியின் தந்தை என ____________ அழைக்கப்டுகிறார்.

   அ) ஜான்ஷோர்    ஆ) காரன்வாலிஸ்    இ) வெல்லெஸ்லி

4. நான்காம் ஆங்கிலேய–மைசூர்ப் போர் __________ ஆம் ஆண்டு நடைபெற்றது.

   அ) 1779    ஆ) 1789    இ) 1799

### II) பொருத்துக.

| | |
|---|---|
| 1. நிலையான நிலவரித்திட்டம் | வெல்லெஸ்லி பிரபு |
| 2. துணைபடைத்திட்டம் | சீரங்கப்பட்டின உடன்படிக்கை |
| 3. சர் ஜான்ஷோர் | காரன்வாலிஸ் பிரபு |
| 4. மூன்றாம் ஆங்கிலேய–மைசூர்ப் போர் | தலையிடாக் கொள்கை |

## III) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நிலையான நிலவரித்திட்டம் __________ ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
2. நிலையான காவல் துறையை உருவாக்கியவர் __________ ஆவார்.
3. காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பைத் தொகுத்தவர் __________ ஆவார்.
4. வெல்லெஸ்லி பிரபு __________ ஆண்டு தலைமை ஆளுநர் ஆனார்.

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. நிலையான நிலவரித்திட்டத்தினால் அதிகப் பாதிப்பிற்குள்ளானவர்கள் யார் ?
2. வெல்லெஸ்லி பின்பற்றிய கொள்கை யாது ?
3. துணைப்படைத்திட்டத்தை ஏற்றுக் கொண்ட முதல் இந்திய மன்னர் யார் ?

## V) குறுகிய விடையளி.

1. காரன்வாலிஸ் பிரபு நீதித்துறையை எவ்வாறு மேம்படுத்தினார் ?
2. நான்காம் ஆங்கிலேய–மைசூர்ப் போரின் விளைவுகள் யாவை ?
3. காரன்வாலிஸ் 1790 ஆம் ஆண்டு மைசூருக்கு எதிராக ஏன் போர் தொடுத்தார் ?

## VI) விரிவான விடையளி.

1. காரன்வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்திய சீர்திருத்தங்களை விவரி.
2. நிலையான நிலவரித்திட்டம் பற்றி குறிப்பு வரைக.
3. வெல்லெஸ்லி பிரபுவின் துணைப் படைத்திட்டத்தை விளக்கி அதன் நன்மைகள் மற்றும் தீமைகளை விவரி.

## VII) செய்முறைப் பயிற்சி.

1. இந்தியக் குடிமைப் பணி "இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் முதுகெலும்பு" என அழைக்கப்பட்டது. இந்தியக் குடிமைப் பணி இன்று இந்திய ஆட்சிப் பணியாக வளர்ந்துள்ளது குறித்து ஒரு அறிக்கை தயாரிக்கவும்.

2. இந்திய வரைபடத்தில் வெல்லெஸ்லி பிரபு ஆட்சியின் போது இருந்த ஆங்கிலப் பேரரசின் எல்லையினைக் குறிப்பிடுக.

## உருவாக்க மதிப்பீடு

**1. விவரச்சுருள் தயாரித்தல்:**

காரன்வாலிஸ் பிரபுவின் சீர்திருத்தங்கள் பற்றிய விவரச்சுருள் ஒன்று தயாரிக்கவும்.

**2. அறிக்கை தயாரித்தல்:**

"திப்புசுல்தான் மைசூரின் புலி" என்பது குறித்து அறிக்கை ஒன்று தயார் செய்க.

**3. தகவல் அட்டை தயாரித்தல்:**

கீழ்க்காணும் அட்டவனையை நிரப்பி நான்கு மைசூர்ப் போர்கள் பற்றிய தகவல் அட்டை தயார் செய்க.

| போர் | ஆண்டு | காரணங்கள் | நிகழ்வுகள் | உடன்படிக்கைகள் | விளைவுகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**4. விவாதம்:**

துணைப்படைத்திட்டம் இந்திய சுதேச மன்னர்களைத் தன்னிச்சையாகச் செயல்பட வைக்கவில்லை. இக்கூற்றை வகுப்பில் குழு விவாதம் செய்க.

5. 17 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டு வரை ஆங்கில அரசின் வளர்ச்சியைக் கீழ்க்கண்ட குறிப்புகளைக் கொண்டு விவரிக்கவும்

- இந்திய வணிகத்தில் நுழைதல்
- சில வணிகத் தளங்களைக் கைப்பற்றுதல்
- இந்திய சுதேச அரசுகளைக் கட்டுப் படுத்துதல்
- முழு இந்தியாவையும் அடிமைப்படுத்துதல்

## 3. மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் (கி.பி.1813–கி.பி.1823)

வெல்லெஸ்லி பிரபுவைத் தொடர்ந்து ஹேஸ்டிங்ஸ் பிரபு என்றழைக்கப்பட்ட மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் வங்காளத்தின் தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்றார். வெல்லெஸ்லியின் பணியினை இவர் நிறைவு செய்தார். இவர் காலத்தில் நேபாளத்தைச் சார்ந்த கூர்க்கர் இனத்தவர், பிண்டாரி இனத்தவர்கள் மற்றும் மராத்திய தலைவர்கள் ஆங்கிலப் பேரரசை அகற்ற எண்ணினார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அனைத்து சவால்களையும் ஹேஸ்டிங்ஸ் திறமையுடன் சமாளித்து ஆங்கில அரசாட்சியை இந்தியாவில் நிலைபெறச் செய்தார்.

இவருடைய ஆட்சிக் காலத்தில் 1813 ஆம் ஆண்டின் பட்டயச் சட்டம் ஆங்கில அரசால் நிறைவேற்றப்பட்டது.

### 1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் வியாபார உரிமம் மேலும் 20 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. இந்தியாவுடனான வாணிப உறவு ஆங்கிலேய வியாபாரிகளுக்குத் திறந்து விடப்பட்டது. கிழக்கிந்திய நிறுவனத்தின் வாணிகத் தனி உரிமை இரத்தானது. இந்தியர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆண்டு தோறும் ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டது. இந்தியாவில் வாழும் ஐரோப்பியரின் சமய நலன் காக்க கிறித்துவப் பேராயர்கள் நியமிக்கப்பட்டனர். ஆங்கில நாட்டு வியாபாரிகளும், மதப் போதகர்களும் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியோடு இந்தியாவில் வசிக்க அனுமதிக்கப்பட்டனர்.

### பட்டயச் சட்டத்தின் முக்கியத்துவம்

ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தின் வியாபாரத் தனி உரிமை முடிவுக்கு வந்தது. கிறித்துவச் சமயப் போதகர்கள், தங்கள் சமயத்தைப் பரப்புவதற்கு அனுமதி பெற்றனர்.

### கூர்க்கர்களுடன் போர் (கி.பி.1814–கி.பி.1816)

நேபாளத்தைச் சார்ந்த கூர்க்கர் இனத்தவர்கள் ஆங்கிலேயர்களுக்குப் பெரும் சவாலாக விளங்கினர்கள். இவர்கள் 1814 இல் ஷெரோஜ் மற்றும் பத்வால் பகுதிகளைக் கைப்பற்றினார். ஆங்கிலேயர் இதனைச் சவாலாக ஏற்றுக் கொண்டு கூர்க்கர் இனத்தலைவர் அமர்சிங்கைத் தோற்கடித்தனர். கி.பி.1816 ஆம் ஆண்டு கூர்க்கர்கள் ஆங்கிலேயர்களோடு சகௌலி அமைதி உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர்.

### பிண்டாரிகளுடன் போர் (கி.பி.1816–கி.பி.1818)

பிண்டாரிகள் மத்திய இந்தியாவில் வாழ்ந்த கொள்ளைக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அமிர்கான், வாசில் முகமது, கரிம்கான் மற்றும் சேட்டு போன்றவர்கள் பிண்டாரிகளின் தலைவர்கள் ஆவார்கள். தலைமை ஆளுநர் ஹேஸ்டிங்ஸ் ஒரு பெரும் ஆங்கிலப் படையைப் பிண்டாரிகளுக்கு எதிராக அனுப்பி அவர்களைத் தோற்கடித்தார். இவ்வாறு ஹேஸ்டிங்ஸ் பிண்டாரிகளின் கொடுஞ் செயலை அழித்து மத்திய இந்தியாவில் வாழும் மக்களைக் காப்பாற்றினார்.

## மூன்றாம் ஆங்கிலேய–மராத்தியப் போர் (கி.பி.1817–கி.பி.1818)

ஆங்கிலேயர்களின் அதிகார வளர்ச்சி மராத்தியர்களுக்குப் பொறாமையாக அமைந்தது. எனவே பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் மராத்திய தளபதிகளை ஒன்றிணைத்து ஓர் அரசியல் கூட்டமைப்பை ஆங்கிலேயர்களுக்கு எதிராக அமைத்தார். பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் கி.பி.1817 ஆம் ஆண்டின் இறுதியில் பூனாவிலிருந்த ஆங்கிலப் பிரதிநிதியைக் கொலை செய்தார். இது மூன்றாவது ஆங்கிலேய மராத்திய போருக்கு வழி வகுத்தது. போருக்குப் பின் மராத்தியர்கள் முற்றிலும் முறியடிக்கப்பட்டனர்.

## விளைவுகள்

இப்போருக்குபின் பீஷ்வா பதவி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாஜிராவிற்கு ஆண்டிற்கு ரூபாய் 8 லட்சம் ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. மராத்திய நிலப் பகுதியில் சதாரா என்ற சிற்றரசை உருவாக்கி சத்ரபதி சிவாஜியின் வாரிசான பிரதாப் சிங்கை அரசராக ஆங்கில அரசு பிரகடனப் படுத்தியது. வலிமை மிகுந்த மராத்தியப் பேரரசு தனது அதிகாரத்தை இழந்தது.

இவ்வாறு ஆங்கிலேயரசு இந்தியாவில் தனது வலிமை மிகுந்த பேரரசினை உருவாக்கியது.

## ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் சீர்திருத்தங்கள்

ஹேஸ்டிங்ஸ் கி.பி. 1822 ஆம் ஆண்டு வங்காளக் குத்தகைச் சட்டத்தை நிறைவேற்றி விவசாயிகளின் நலனைப் பாதுகாத்தார். இந்திய மக்களின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்காகக் கி.பி.1817 ஆம் ஆண்டு கல்கத்தாவில் ஒரு கல்லூரியை நிறுவினார். வட்டார மொழிப் பத்திரிக்கை தடைச்சட்டத்தை நீக்கி, “சமாச்சார் பத்திரிக்கை” என்ற செய்தித்தாள் வெளிவர காரணமாக இருந்தார். இந்தியர்கள் நிர்வாகத்தில் உயர் பதவியில் அமர்த்தப்பட்டனர்.

இவரின் ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாணத்தில் “இரயத்து – வாரி” முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தினால் விவசாயிகள் நிலவரியை முறையாக அரசாங்கத்திற்குச் செலுத்தினால் அவர்கள் நிலத்தின் சொந்தக்காரர்களாகக் கருதப்பட்டனர்.

இவ்வாறு ஹேஸ்டிங்ஸ் பிரபு மக்கள் நலனில் அக்கறை காட்டி பல சீர் திருத்தங்களை நிறைவேற்றி நல்லாட்சி நடத்தினார்.



## பயிற்சி

I) சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. ___________ பிரபு துவக்கிய பணியை ஹேஸ்டிங்ஸ் முடித்து வைத்தார்.

   அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆ) வெல்லெஸ்லி இ) முதலாம் மிண்டோ

2. பட்டயச்சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ___________.

   அ) 1813 ஆ) 1814 இ) 1815

3. மூன்றாம் ஆங்கிலேய–மராத்தியப் போர் __________ ஆண்டு நடைபெற்றது.

அ) 1817 ஆ) 1718 இ) 1870

4. ஹேஸ்டிங்ஸ் பிரபு __________ முறையை வருவாய்த்துறையில் அறிமுகப்படுத்தினார்.

அ) மகல்வாரி ஆ) இரயத்துவாரி இ) நிலையான நிலவரித் திட்டம்

## II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வங்காளக் குத்தகைச் சட்டத்தைக் கொண்டு வந்தவர் __________ ஆவார்.
2. ஆங்கிலேய–கூர்க்கர் போரினை முடிவுக்குக் கொண்டு வந்த அமைதி ஒப்பந்தம் __________ ஆகும்.
3. 1813–ஆம் ஆண்டு பட்டயச்சட்டம் சமயப் போதகர்களை__________ சமயத்தை இந்தியாவில் பரப்ப அனுமதித்தது.
4. கூர்க்கர் இனத்தவர் __________ நிலப்பகுதியில் வாழ்ந்தவர்கள்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. அமர்சிங் | பிண்டாரிகளின் தலைவர் |
| 2. மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் | நேபாளம் |
| 3. அமிர்கான் | கூர்க்கர் தலைவர் |
| 4. காத்மாண்டு | தலைமை ஆளுநர் |

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. சதாரா அரசு யாரிடம் ஒப்படைக்கப்பட்டது ?
2. ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்தில் வெளி வந்த வட்டார மொழிச் செய்தித்தாளின் பெயரென்ன ?
3. எந்தச் சட்டம் ஆங்கிலக் கிருத்துவப் போதகர்களை இந்தியாவில் குடியேற அனுமதித்தது ?

## V) குறுகிய விடையளி.

1. கூர்க்கர் போருக்கான காரணங்கள் யாவை ?
2. மூன்றாம் ஆங்கிலேய–மராத்தியப் போரின் விளைவுகள் யாவை ?
3. மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்கள் பற்றி குறிப்பு வரைக.

## VI) விரிவான விடையளி.

1. 1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் பற்றி குறிப்பு தருக.
2. மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் நடத்திய போர்கள் பற்றி விவரி

## உருவாக்க மதிப்பீடு

**1. கலந்துரையாடல்:**

1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின் சிறப்பியல்புகளை வகுப்பில் கலந்துரையாடுக.

**2. அட்டவணை தயாரித்தல்:**

நிலையான நிலவரித் திட்டத்திற்கும் இரயத்துவாரி முறைக்கும் உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

**3. அறிக்கை தயாரித்தல்:**

1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் – இந்திய கல்வி வளர்ச்சியில் முதற்படி – இக்கூற்றைக் குறித்து அறிக்கை ஒன்று தயார் செய்க.

# முதல்நிலைத் தொழில்கள் II

## 1. வேளாண்மை

பண்டைய மனித நாகரிங்கள் பெரிய ஆற்றுச் சமவெளிகளில் வளர்ச்சியடைந்து செழுமையுற்றன. ஏனெனில் மனிதன் பயிர்வளர்ப்பினை முதலில் ஆற்றுச்சமவெளிப் பகுதிகளில் தொடங்கியது மட்டுமின்றி அவ்விடங்களில் கிடைத்த தாராளமான நீரும், உரமான மண்ணும் பயிர் செழிக்க முக்கியக் காரணங்களாக விளங்கியதேயாகும்.

வேளாண்மை என்பது பயிர் வளர நிலத்தைத் தயார் செய்யும் செயல்முறை மட்டுமன்றி கால்நடைகளைப் பராமரிக்கும் செயல் முறைகளையும் உள்ளடக்கியதாகும். இது வேளாண் பயிர்த்தொழில் எனவும் அழைக்கப்படுகிறது. வேளாண்மை ஒரு முதன்மைத்தொழிலாகும்.

வேளாண் பயிர்களை உணவுப் பயிர்கள் எனவும் பணப் பயிர்கள் எனவும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். உணவுப் பயிர்கள் தன்னிறைவுப் பயிர்களாகவோ வணிகப் பயிர்களாகவோ வளர்க்கப்படுகின்றன. (எடுத்துக்காட்டு: நெல், கோதுமை, கேழ்வரகு சோளம், இன்ன பிற).

பணப்பயிர்கள் பல்வேறு தொழிலகங்களுக்கு மூலப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகிறது. (எடுத்துக்காட்டு: இரப்பர், சின்கோனா மற்றும் பருத்தி).

### வேளாண்தொழிலை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகள்

காலநிலை, நிலத்தோற்றம், மண்வளம், நீர்வளம் மற்றும் பணியாளர்கள் ஆகிய காரணிகள் வேளாண் தொழில்களில் வேறுபாடுகளையும், பரவலையும் நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன.

1. காலநிலை

வெப்பநிலை மற்றும் மழையின் அளவு, வேளாண்தொழிலைப் பாதிக்கும் காலநிலைக் காரணிகளாகும்.

### அ. வெப்பநிலை

6° சென்டிகிரேடுக்குக் குறைவாக நிலவும் வெப்பநிலையில் பெரும் பான்மையான செடிகள் வளரஇயலாது. வெவ்வேறு காலநிலை வட்டாரங்களில் வெவ்வேறு விதமான பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, நெல், அயன மண்டலத்தில் விளைவிக்கப்படும் முதன்மைப்பயிராகும். ஏனெனில், அதிக

பண்டைய ஆற்றுச் சமவெளி நாகரிகங்கள்

| ஆற்றுச்சமவெளி | நாகரிகம் | கண்டம் |
|---|---|---|
| சிந்து | ஹரப்பா –மொகஞ்சதாரோ | ஆசியா |
| நைல் | எகிப்து | ஆப்பிரிக்கா |
| யூஃப்ரடிஸ் | மெசபட்டோமியா | ஆசியா |
| மஞ்சள் | மஞ்சள் நதி | ஆசியா |

வெப்பமும், அதிகளவு நீரும் நெற்பயிர் வளர தேவைப்படுகிறது. கோதுமை ஒரு மிதவெப்ப மண்டலப் பயிராகும். கோதுமை வளர குளிர்ந்த காலநிலைத் தேவைப்படுகிறது.

கடல் மட்டத்திலிருந்து நிலங்களின் உயரம் மாறுபடுவதால் உயரத்திற்கேற்ப வெப்பநிலை மாறுபாடுடையதாக உள்ளது. அதுவேளாண்தொழிலை பாதிப்புக்குள்ளாக்குகிறது. அயன மண்டலத்திலுள்ள உயர் பகுதிகளில் மிதவெப்ப மண்டல பயிராகிய காரட் (carrot) போன்ற பயிர்களை விளைவிக்கலாம்.

பயிருக்குப் பயிர், வளர்ச்சிக் காலம் மாறுபடும். பருத்தி போன்ற பயிர்கள் முழுமையான வளர்ச்சி பெற 200 பனிபொழிவற்ற நாட்கள் தேவைப்படுவதால் குறைந்த வெப்பம் நிலவும் பருவ காலங்களில் விளைவிக்கப்படுகிறது.

## ஆ. மழையளவு

காற்றிலுள்ள ஈரப்பதம் அப்பகுதியில் விளையும் பயிர்வகை, பயிர் வளர்வதற்கு ஏற்ற காலம் போன்றவற்றை நிர்ணயிக்கின்றன. பருவகால மழைப்பொழிவு என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். பயிர்கள் வளர்வதற்கு அதிகமான மழைபொழிவு தேவைப்படுகிறது. ஆனால் மழைப்பொழிவு தகுந்த காலங்களில் அமையவில்லையெனில், அது பயிர்வளர்ச்சியினை வெவ்வேறு வகைகளில் பாதிப்பினை ஏற்படுத்தும். ஒவ்வொரு பயிருக்கும் அதன் வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் நீரின் அளவு தேவைப்படுவதால் மழைப்பொழிவுகளில் ஏற்படும் மாற்றம் பயிர்களுக்கு அவசியமான ஒன்று. ஆகையால் பருவநிலைக்கு ஏற்ற மழைப்பொழிவு முக்கியமானது.

எடுத்துக்காட்டாக:

காப்பிக்கு அறுவடையின்போதும், முன்பும் வறண்ட கால நிலை தேவை அதே பருவத்தில் சோளப்பயிர் விளைய நீர் தேவையாய் உள்ளது.

ஒரு பகுதியில் விளையும் பயிரை அங்கு பெய்யும் மழையளவே நிர்மாணிக்கிறது. நெற்பயிர் அதிகமான மழைபொழியும் இடங்களிலும், தினை வகைகள் வறண்ட பகுதிகளிலும் விளைவிக்கப்படுகிறது.

### பயிர் விளைவிக்கும் முறைகள்

### ஒரு பயிர் விளைவிக்கும் முறை

விளைநிலத்தில் ஒரே ஒரு பயிர் மட்டும் ஒரு முறை விளைவிக்கப்பட்டால் அது ஒரு பயிர் விளைவிக்கும் முறை என அழைக்கப்படுகிறது.

### பல்பயிர் விளைவிக்கும் முறை

இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட பயிர்களை ஒரே விளைநிலத்தில் ஒரே பருவகாலத்தில் விளைவித்தால், அது பல்பயிர் விளைவிக்கும் முறை என அழைக்கப்படுகிறது. எடுத்துகாட்டாக, கார்வால் இமயமலைப் பகுதியில் ஒரே விளைநிலத்தில் 12க்கும் மேற்பட்ட பல்வேறு விதமான பீன்ஸ், பருப்பு மற்றும் தினைவகைகள் பயிர் செய்யப்பட்டு அப்பயிர்களின் அறுவடை காலக்கட்டங்களுக்கு ஏற்றவாறு அறுவடை செய்யப்படுகிறது.

### நீர்ப் பாசனம்

மழை குறைவாகப் பொழியும் இடங்களில் அல்லது மழை பொய்க்கும் இடங்களில் வேளாண்தொழில் செய்ய நீர்ப் பாசனம் தேவைப்படுகிறது.

சமூக அறிவியல்

## நீர்ப் பாசன வகைகள்
### கால்வாய் நீர்ப்பாசனம்

கால்வாய்கள் மூலம் வயல்களுக்கு நீர்ப் பாய்ச்சும் முறையினைக் கால்வாய்ப் பாசனம் என்கிறோம் (படம் – 1).



படம்–1 . கால்வாய் நீர்ப் பாசனம்

### தெளிப்பான் பாசனம்

வயலில் வைக்கப்பட்டிருக்கும் தெளிப்பான்கள் மூலம் வயலுக்கு நீர் தெளித்தல் முறையினை தெளிப்பான் பாசனம் என்கிறோம் (படம்–2 ).



படம் –2. தெளிப்பான் பாசனம்

### மையச் சுழற்சிப் பாசனம்



படம்– 3. மையச் சுழற்சிப் பாசனம்

சுழற்சினைக் கொண்டு வட்டப்பாதையில் நீரினைத் தெளிக்கும் முறையை மையச் சுழற்சி நீர்ப்பாசனம் என்கிறோம். எனவே நாம் உயரத்திலிருந்து பார்க்கும்பொழுது பயிர்கள் வட்ட வடிவில் விளைவிக்கப்பட்டிருப்பதைக் காணலாம் (படம்–3).

### சொட்டு நீர்ப்பாசன முறை

சொட்டு நீர்ப்பாசன முறையில், நீர் சொட்டுச் சொட்டாகச் செடிகளின் வேருக்கு நேரடியாகவோ அருகிலோ செலுத்தப்படுகிறது (படம்–4).



படம்–4. சொட்டு நீர்ப்பாசனம்

### 2. நிலத்தோற்றங்கள்

வேளாண்மைக்கு உகந்தநிலத் தோற்றங்களாக விளங்குவது சமவெளிகள், பள்ளத்தாக்குகள், பீட பூமியின் தட்டையான மேல்பகுதிகள் மற்றும்ஆற்றின் டெல்டாப்பகுதிகளாகும். எடுத்துக்காட்டாக, வட இந்தியச் சமவெளி வேளாண் தொழில் செய்ய உகந்த பகுதியாகும். மலைப் பகுதிகளில் சமபரப்புப் பகுதிகள் மிகக் குறைவாகையால், வேளாண்தொழில்

குறைவாகக் காணப்படுகிறது. ஆனால் மலைச் சரிவுகள் காப்பி, தேயிலைப் பயிர்கள் வளர உகந்த இடமாகிறது. இப்பயிர் வளர நீர் வழிந்தோடும், நீர் தங்காத மலைச்சரிவு தேவையாக உள்ளது.

### 3. மண்வளம்

ஒரு வட்டாரத்தில் காணப்படும் மண் வளமே அப்பகுதியில் வளரும் பயிருக்குக் காரணமாக அமையும். வண்டல் மண் மிகச் செழுமையானதாகவும், உர மிக்க மண்ணாகவும் இருப்பதால் பயிர் வளர்ப்பிற்கு ஏற்றதாக விளங்குகிறது . களிமண் தண்ணீரைத் தக்கவைத்துக் கொள்வதால் நெல் மற்றும் பருத்தி வளர உகந்த மண்ணாக கருதப்படுகிறது கரிசல் மண் மற்றும் புல் வெளிமண் போன்ற மண் வகைகள் வேளாண்மைக்குப் பரவலாகப் பயன்படும் வளமான மண் வகைகளாகும்.

### 4. மற்ற காரணிகள்

நிலத்தின் பரப்பு, போக்குவரத்து வசதிகள் சந்தைக்கு அருகில் அமையும் பயிர் வளர் இடம், வேளாண்மைக்காக வங்கிக்கடன் வசதி போன்ற காரணங்கள் வேளாண்மை தொழிலை நிர்ணயிக்கும் மற்ற காரணிகள் ஆகும்.

### வேளாண்தொழிலின் வகைகள்

வேளாண் வகை என்பது வேளாண்மையைக் கையாளும் முறையினையும் அங்கு விளையும் பயிரையும் பொருத்ததாகும்.

மாற்றிட வேளாண்மை, தன்னிறைவு வேளாண்மை, தீவிர வேளாண்மை, வணிக வேளாண்மை, இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் பரந்த வேளாண்மை மற்றும் கலப்புப் பண்ணை வேளாண்மை என வேளாண் தொழில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### அ. தன்னிறைவு வேளாண்மை

இம்முறையில் விவசாயிகள் தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் தேவையான அளவு பயிர்களை விளைவிப்பர். தன்னிறைவு வேளாண்மை இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை எளிய தன்னிறைவு வேளாண்மை மற்றும் தீவிர தன்னிறைவு வேளாண்மை என்பதே ஆகும்.

#### 1. எளிய தன்னிறைவு வேளாண்மை

மலைவாழ் மக்களுள் சிறிய குழுமங்களால் மேற்கொள்ளப்படும் வேளாண் முறையாகும். மாற்றிட வேளாண் முறை இடப்பெயர்வு வேளாண்மை எனவும் அழைக்கப்படுகிறது. விவசாயிகள் தங்களின் ஒரு சிறிய பகுதியில் உள்ள மரங்களை வெட்டி எடுத்துவிட்டு மரங்களை எரித்து அப்பகுதிகளில் தினை வகைகள் மற்றும் கிழங்குகள் போன்ற எளிய பயிர்களை வளர்ப்பர். சில வருடங்களுக்குப் பிறகு அந்த நிலங்களை விட்டுவிட்டுக் காட்டில் மற்றொரு பகுதியைத் தேர்ந்தெடுத்து மேற்கூறிய அதே செய்முறையில் விவசாயம் மேற்கொள்வர்.



படம்– 5. மில்பா

மாற்றிட வேளாண்தொழில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்களுடன் அழைக்கப்படுகிறது. பிரேசிலில் ரோக்கோ எனவும், ஜூம்,

பேவார் மற்றும் போடா என இந்தியாவிலும், மில்பா (படம்–5) என மத்திய அமெரிக்காவிலும் அழைக்கப்படுகிறது.

**2. தீவிர தன்னிறைவு வேளாண்மை**

மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ள பருவமழை பெறும் ஆசியப் பகுதிகளில் இம்முறை காணப்படுகிறது. நெற்பயிரே அதிகமாக விளைவிக்கப்படும் பயிராகும். விளை நிலம் சிறியதாக இருக்கும் ஆனால் அவற்றில் விவசாயிகள் தீவிர வேளாண் சாகுபடி செய்வர். உரங்கள், அதிக மகசூல் தரும் உயர்ரக விதைகள் பயன்படுத்தியும், குடும்பத்திலுள்ளவர்களை வேளாண் பணியில் ஈடுபடுத்தியும், விளை நிலத்தை ஒருபோதும் வெற்றாக விடாமலும், தீவிர முறையில் பயிர் விளைவிப்பர். மகசூல் அதிகமாகவே இருக்கும் (படம்–6).



படம்–6. தீவிர வேளாண்தொழில்

## ஆ. வணிக வேளாண்மை

வணிக வேளாண்மை பரந்த வேளாண்மை எனவும் அழைக்கப்படுகிறது. இவ்வகை வேளாண்மையில் அதிக பரப்பில் (படம் – 7) இயந்திரங்களை பயன்படுத்திப் பயிர்கள் பெருமளவில் விளைவிக்கப்படுகின்றன. கோதுமை இம்முறையில் அதிக அளவில் பயிரிடப்படும் பயிர் ஆகும். ஆனால் மகசூல் அளவு ஏக்கருக்கு குறைவாக இருக்கும். வட அமெரிக்கா தென் அமெரிக்கா மற்றும் அர்ஜென்டைனா போன்ற பகுதிகளில் இம்முறை வெகுவாகக் காணப்படுகிறது.(படம் – 7)



படம்–7. வணிகவேளாண்மை

## இ. தோட்டப்பயிர் வேளாண்மை

தோட்டப்பயிர்கள் அயன மண்டலப்பகுதிகளில் பெரிய நிலப்பரப்புகளில் மேற்கொள்ளப்படும் முறையாகும். அதிக முதலீடு செய்யப்பட்டு தேயிலை, காப்பி (படம்–8), இரப்பர், போன்ற பயிர்களை மட்டுமே விளைவிப்பதைக் கருத்தாகக்கொண்டு விளைவிக்கும் முறையாகும். இவ்வகை பயிர்கள் தொடர்ந்து பல வருடங்களுக்குப் பயனளிப்பதாக உள்ளது.



படம்-8 .காப்பித் தோட்டம்

தோட்டப்பயிர் வேளாண்மை இலங்கை, மலேசியா, இந்தியா

இந்தோனேஷியா மற்றும் பல நாடுகளில் காணப்படுகிறது.

### ஈ. கலப்புப் பண்ணை வேளாண்மை

இவ்வேளாண்முறை ஒரு சிறந்த வேளாண்முறையாகும். ஏனெனில் இதில் பயிர் விளைவித்தல் மற்றும் கால்நடை வளர்த்தல் ஆகிய இரண்டும் நடைபெறுகிறது. இவ்வகை வேளாண்மை உலகில் நன்கு வளர்ச்சியடைந்த பகுதிகளில் பின்பற்றப்படுகிறது. மேற்கு ஐரோப்பாவில் இத்தகைய கலப்புப் பண்ணை முறை ஒரு பொதுவான வேளாண்தொழிலாகும்.

## பயிற்சி

### I) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வேளாண்மை ஒரு__________தொழிலாகும்.
2. வேளாண் பயிர்களை உணவுப் பயிர்கள் மற்றும்__________பயிர்கள் என இரு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
3. __________பாசன முறையில் நீர் செடிகளின் வேருக்கு அருகில் செலுத்தப்படுகிறது.
4. __________மற்றும் மழையின் அளவு வேளாண் தொழிலைப் பாதிக்கும் கால நிலைக் காரணிகளாகும்.
5. விளைநிலத்தில் ஒரே ஒரு பயிர் மட்டும் ஒரு முறை விளைவிக்கப்பட்டால் அது__________என அழைக்கப்படுகிறது.

### II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. __________வேளாண்தொழிலுக்கு ஏற்ற இடமாகும்.
   அ) பீடபூமி ஆ) சமவெளி இ) மலைப்பகுதி
2. __________வேளாண்தொழில் வகையில் அதிக அளவு பயிர்கள் விளைவிக்கப்படுகிறது.
   அ) தன்னிறைவு ஆ) மாற்றிட இ) வணிக
3. பிரேசில் நாட்டில் இடப்பெயர்வு அல்லது மாற்றிட வேளாண்மை__________என அழைக்கப்படுகிறது.
   அ) ஜூம் ஆ) ரோக்கோ இ) மில்பா
4. நெல் ஒரு__________பயிராகும்.
   அ) மிதவெப்ப மண்டல ஆ) பண இ) அயனமண்டல
5. மழை குறைவாகக் கிடைக்கப் பெறும் பகுதிகளில் __________ அவசியம்.
   அ) நீர்ப் பாசனம் ஆ) கிணறுகள் இ) சொட்டுநீர் பாசனம்

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. தன்னிறைவு வேளாண்தொழில் | மலைச் சரிவுகள் |
| 2. நைல் பள்ளத்தாக்கு நாகரிகம் | மையச்சுழற்சி முறை |
| 3. வணிக வேளாண் தொழில் | எகிப்து |
| 4. வட்ட வடிவ நிலம் | விற்பனைக்கான பயிர் |
| 5. தேயிலை | சிறு நிலப்பகுதிகள் |

## IV) சுருக்கமாக விடையளிக்க.

1. வேளாண் தொழிலை நிர்ணயிக்கும் காரணிகளை எழுதுக.
2. பல்பயிர் விளைவிக்கும் முறை என்றால் என்ன ?
3. வண்டல் மண் பற்றி குறிப்பு எழுதுக.
4. தோட்டப்பயிர்கள் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுகள் தருக.

## V) விரிவாக விடையளிக்க.

1. வேளாண் தொழிலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை ? ஒவ்வொரு காரணியைப் பற்றி குறிப்பு எழுதுக.
2. நீர்ப் பாசனமுறை என்றால் என்ன ? நீர்ப் பாசனமுறைகளின் முறைகளை விளக்குக.

**கீழ்வரும் அட்ட வணையை நிரப்புக.**

| | தன்னிறைவு வேளாண்மை | வணிக வேளாண்மை | மாற்றிட வேளாண்மை | தோட்டப் பயிர்கள் | கலப்புப் பண்ணை |
|---|---|---|---|---|---|
| விளக்கம் | | | | | |
| பயிர்கள் | | | | | |
| இடங்கள் | | | | | |

## VI) செய்முறைப் பயிற்சி.

1. நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள வேளாண் நிலத்திற்குச் செல்லவும்.
2. வேளாண் நிலங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு இயந்திரங்களின் படங்களைச் சேகரிக்கவும்.

## உருவாக்க மதிப்பீடு

**I. செய்முறைப் பயிற்சி:**

அ. நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள வேளாண் நிலத்திற்குச் செல்லவும்.

**II. படங்கள் சேகரித்தல்:**

அ. உழவுத் தொழிலில் உள்ள வேளாண் நிலங்களைத் தயார் படுத்தும் முறை, உழுதல், விதைத்தல், நாற்று நடுதல், நீர்ப் பாசன வசதி செய்தல், அறுவடை ஆகிய செயல் முறைகளை விளக்கும் படங்களை சேகரிக்கவும்.

**III. வார்த்தைகளைக் கண்டுபிடித்தல்:**

| | | |
|---|---|---|
| அ. சு ற் ய மை சி ழ ச் | : | ஒருவகை நீர்ப்பாசன முறை |
| ஆ. ட ண் வ ல் ண் ம | : | வளமிக்க மண் |
| இ. ரு ப ஒ ர் யி ளை வு வி | : | ஒரு பயிர் விளைவிக்கும் முறை |
| ஈ. கோ ன் னா சி | : | ஒரு பணப் பயிர் |
| உ. பா ல் மி | : | மாற்றிட வேளாண்மை |

## முதல்நிலைத் தொழில்கள் II

## 2. பயிர்கள்

மனிதனால் பலவிதமான வேளாண்பயிர்கள் பயிரிடப்படுகின்றன. சில பயிர்கள் உணவுக்காகவும் சில பயிர்கள் இழைகளுக்காகவும் பயிரிடப்படுகின்றன. தானியங்களே மனிதனது அடிப்படை உணவாகும். மாவுச்சத்துக் கொண்ட விதைகளையுடைய தானியவகைகள் புல்வகைத் தாவரங்களாகும். நெல், கோதுமை, சோளம் மற்றும் தினை வகைகள், பொதுவான தானிய வகைகள் ஆகும்.

### 1. உணவுப்பயிர்கள்

### அ. நெல்

நெல் உலகில் பெரும்பான்மையான மக்களின் முக்கியமான உணவு அரிசி ஆகும். குறிப்பாக ஆசியா மற்றும் இலத்தீன் அமெரிக்கப்பகுதிகளில் உள்ள மக்கள் அரிசியை முக்கிய உணவாகக் கொண்டுள்ளனர். நெல் ஒரு அயனமண்டலப் பயிராகும். வண்டல்மண் பகுதிகளிலும், ஆறுகளின் டெல்டாப்பகுதிகளிலும் மிகச்செழிப்பாக வளரும் பயிராகும் (படம்–9). இப்பயிரின் மூல இனம் தெற்கு ஆசியப் பகுதியிலிருந்து வந்திருக்கும் எனக் கருதப்படுகிறது. சீனாவின் யாங்டிசி ஆற்றுச் சமவெளியில் இப்பயிரின் பயன்பாடு முதன் முதலில் தொடங்கப்பட்டது என்ற கருத்தும் நிலவுகிறது.

### நெல் வளர்ச்சிக்குத் தேவையான சூழ்நிலைகள்


நெல் வளர்வதற்குச் சராசரியாக 24°செ. தட்பவெப்பநிலையும், சராசரியாக 150செ.மீ. மழையளவும் தேவைப்படுகிறது. மழை போதுமான அளவு இல்லாத இடங்களில் நீர்ப்பாசன வசதி தேவைப்படுகிறது. நெல் விளைவிக்க சமமான நிலம் தேவை. ஏனெனில், அது தேங்கிய தண்ணீரில் வளர்ச்சியுறுகிறது. உயரமான நிலப்பகுதிகளில், நெல் விளைவிக்க, சரிவுகளைச் சமப்படுத்தி, தாழ்நிலங்களில் பயிரிடுவது போல் நீர் தேங்கி நிற்க படிக்கட்டு முறையைப் பயன்படுத்துகின்றனர். ஆற்றின் டெல்டாப் பகுதிகளில் நெற்பயிர் முப்போகம் விளைவிக்கப்படுகிறது. வண்டல் மண்ணில் சத்து மிகுந்துள்ளதால் நெற்பயிர் விளைவிக்க உகந்த மண்ணாகக் கருதப்படுகிறது. நெற்பயிர், விளைநிலம் தயார் செய்தல், விதையிடுதல், நாற்று நடுதல், களையெடுத்தல், அறுவடை மற்றும் பல வேலைகள் கைகளால் செய்யப்படுவதால் அதிக அளவு வேலையாட்கள் இப்பயிர் வளர்க்கத் தேவைப்படுகின்றனர்.



படம்–9. வயல்வெளி–தமிழ்நாடு

ஆசியா அதிக அளவில் நெல் உற்பத்தி செய்கிறது. உலகின் 98% நெல் உற்பத்தி ஆசியாவில் விளைவிக்கப்படுகிறது. நெல் உற்பத்தியில் சீனா, இந்தியா, இந்தோனேஷியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் உலகில் முதல் நான்கு உற்பத்தி நாடுகளாகத் திகழ்கின்றன. (படம்–10) இந்தியாவில்

## உலகின் கோதுமை மற்றும் நெற்பயிர் உற்பத்தி செய்யும் முக்கிய வட்டாரங்கள்




படம் –10

நெற்பயிர் அனைத்து பெரிய ஆற்றுச் சமவெளிகளிலும் பயிரிடப்படுகிறது.

### ஆ. கோதுமை

கோதுமை ஒரு மிதவெப்ப மண்டலப் பயிராகும். மிதவெப்ப மண்டலப் பகுதியின் முக்கிய உணவுப்பயிராக இது கருதப்படுகிறது. உலகின் 25% நிலப்பகுதி கோதுமை பயிரிடப் பயன்படுத்தப்படுகிறது.

### கோதுமை வளர்ச்சிக்குத் தேவையான சூழ்நிலைகள்

கோதுமைப் பயிர் வளர ஆரம்பக் காலகட்டத்தில் மிதமான வெப்பமும், ஈரப்பதமும் தேவை. வளர்ச்சியின் பிற்பகுதியின் சூரிய வெப்பமும், உலர்ந்த நிலையும் தேவைப்படுகிறது. கோதுமைப் பயிருக்கு 15°செ. முதல் 20°செ. வரை உள்ள தட்பவெப்பநிலையே ஏதுவான வெப்பநிலை ஆகும்.



படம்–11. கோதுமை வயல்வெளி

இதற்கு 50–60செ.மீ. சராசரி மழை அளவு தேவைப்படுகிறது. களிமண் அல்லது வண்டல் மண் கலந்த களிமண் கோதுமை வளர உகந்த மண்ணாகும். உலகின் சிறந்தவகை கோதுமைப் பயிர்கள் மிதவெப்ப மண்டல புல் வெளிகளிலிருந்து கிடைக்கப் பெறுகிறது. ஏனெனில் அங்குள்ள மண்ணில் அதிக அளவு உயிர்ச் சத்து மிகுந்து காணப்படுகிறது. கோதுமை வளர்ப்புக்கு இயந்திரங்கள் தேவைப்படுகிறது. அவற்றுடன் பெரிய சமனற்ற மேல்கீழ் நிலப் பகுதிகளிலும் விளைவிக்கப்படுகிறது (படம்–11).

உலகின் மிகப் பெரிய கோதுமை விளைவிக்கும் பகுதிகள் அ.ஐ.நா, சீனா, யுக்ரேன், கனடா, அர்ஜென்டைனா, ஆஸ்திரேலியா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகும் (படம் – 10). உத்திரபிரதேசம் பஞ்சாப் மற்றும் அரியானா ஆகிய மாநிலங்கள் இந்தியாவில் அதிகளவு கோதுமை உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும்.

### 2. இழைப்பயிர்கள்

இழைப்பயிர்கள் பருத்தி, சணல் மற்றும் ஆளிவிதைச் செடி ஆகியவை இழைப் பயிர்களாகும்.

### அ.பருத்தி

பருத்தி அயன மற்றும் துணை அயனப் பகுதியில் மட்டுமே விளைவிக்கும் இழைப் பயிராகும்.



படம்–12. பருத்திச்செடி

பருத்திச் செடியில் விதைகள் மூடிய, மிருதுவான, அடர்ந்த இழைகள் கொண்ட பந்துபோன்ற அமைப்பினைக் கொண்டபகுதியாக விளைகிறது (படம் 12). இழையிலிருந்து விதைகளைப் பிரிக்கும் முறை ஜின்னிங் (Ginning) எனப்படும்.

### பருத்தி வளர்ச்சிக்குத் தேவையான சூழ்நிலை

தட்பவெப்பநிலை 20° செ. முதல் 30°செ. வரை இருக்கும் அயன மண்டலப்பகுதிகளில், 50–100 செ.மீ மழை அளவு உள்ள பகுதிகளில் பருத்தி விளைகிறது. கரிசல் மண் மற்றும் வண்டல் மண் பருத்திப்பயிர் விளைய ஏற்ற மண்ணாகும். குறைவான கூலி பெற்றுக்கொள்ளும் சிறந்த தொழிலாளிகள் பருத்திப்பகுதியைச் செடியிலிருந்து பறிக்கத் தேவைப்படுகின்றனர். இத்தகைய செயல்கள் உலகின் சில பகுதிகளில் இயந்திரங்கள் கொண்டு செய்யப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், உஸ்பெகிஸ்தான், பிரேசில் மற்றும் பாகிஸ்தான் ஆகியவை பருத்தி உற்பத்தியில் முதல் இடம் வகிக்கும் நாடுகளாகும்.

இந்தியாவில் மஹாராஷ்டிரம், குஜராத், தமிழ்நாடு, கர்நாடகா, மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், பஞ்சாப், ஹரியானா மற்றும் இராஜஸ்தானின் ஒரு சில பகுதிகளிலும் பருத்தி விளைவிக்கப்படுகிறது.

### ஆ. சணல்

சணல் என்பது மிருதுவான, நீளமான, பளபளக்கும் தாவர இழையாகும்(படம்–13). இது கயிறு மற்றும் திடமான நூலாக மாற்றப்படுகிறது. சணற்பைகள், தரை விரிப்புகள் மற்றும் இழைகள் மற்றும் பல பொருள்கள் தயாரிக்க சணல் பயன்படுகிறது. சணல் தங்க இழைப் பயிர் எனவும் அழைக்கப்படுகிறது.

### சணல் வளருவதற்கு ஏற்ற சூழ்நிலை

30°செ. உள்ள அதிக வெப்பமும், 150 செ.மீ. மேலான மழையளவும் சணல் வளரத் தேவைப்படுகிறது. வண்டல்மண் சணல் விளைவிக்க ஏற்ற மண்ணாகும். சணல் செடிகளை நீரில் ஊறவைத்து, மக்கச்செய்து இழைகளைப் பிரித்தெடுக்கும் செய்கைக்குத் (retting) தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.



படம்–13. நீரில் சணல் தாவரம் ஊறவைத்து மக்கச்செய்யும் முறை



சணல் பொருள்கள்

ஊறவைத்து மட்கச்செய்தல் என்பது ஒரு நுண் உயிரியல் (Microbiological) செய்முறையாகும். இம்முறையில் சணல் தாவரத்தின் மேற்பகுதியை மிருதுவாக்க 2–3 வாரங்கள் நீரில் ஊறவைத்து மட்கச்செய்த பின்னர் இழைகள் பிரித்தெடுக்கப்படுகின்றது. (படம்–13)

இந்தியாவும் வங்காளதேசமும் சணல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடுகளாகும்.



சணல் பொருள்கள்

### 3. பணப்பயிர்கள்

### அ. கரும்பு

கரும்பு ஓர் உயரமான அயன மண்டலப் புல்வகைத் தாவரமாகும். இது 3.5 மீட்டர் வரை வளரக்கூடிய தாவரமாகும்(படம்–14) இது அயன மற்றும் துணை அயன மண்டலப் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் வளர்க்கப்படும் பயிராகும்.



படம்–14. கரும்பு

### கரும்பு வளர்க்க ஏற்ற சூழ்நிலை

கரும்பு வளர சராசரியாக 24°செ. வெப்பம் ஆண்டு முழுவதும் தேவைப்படுகிறது.130 செ.மீ. மழையளவும் நல்ல வளமான மண்ணும் இப்பயிர் வளர தேவைப்படுகிறது. இப்பயிர் அறுவடை செய்யும் காலத்தில் அதிகளவு வேளாண் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.

இலத்தீன் அமெரிக்கா மற்றும் தென் மற்றும் கிழக்கு ஆசியப் பகுதிகள் கரும்பினை உற்பத்தி செய்யும் முக்கியமான நாடுகளாகும். இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, பிரேசில் ஆகிய நாடுகளும் கரும்பு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

### ஆ. தேயிலை

தேயிலையின் இலைகள் பானம் தயாரிக்கும் அயன மண்டலச் செடியாகும். தேயிலை, பல வருடங்களுக்குப் பயன்தரக்கூடிய செடி வகையாகும். தேயிலையைப் பறிக்கவும் புதிய இலைகள் தொடர்ந்து முளைக்கவும் தேயிலைச் செடிகள் 1.5மீ. உயரத்திற்கு வெட்டிவிடப்படுகின்றன. (படம்–15).



படம்–15. தேயிலைத்தோட்டம்

### தேயிலை வளர ஏற்ற சூழ்நிலை

அயன மற்றும் துணைஅயனப் பகுதிகளின் மலைகளின் சரிவுப்பகுதிகளில் தேயிலை வளர்க்கப்படுகிறது. சராசரியான 21°செ. வெப்பமும், 150 செ.மீ மழையும், நல்ல மண் வளமும் தேயிலை வளரத் தேவைப்படுகிறது. அதிகமான பனி செடிகளை வீழ்த்தும். இப்பயிர் தொழிலாளர்கள் சார்ந்த பயிராகும். கடுமையான காற்று மற்றும் அதிக வெப்பத்தைத் தாங்கும் திறன் தேயிலைச் செடிகளுக்கு இருப்பதால்,

மலைச்சரிவுகளில் காற்று வீசும்திசையில் இது வளர்க்கப்படுகிறது.

சீனா, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் தேயிலையை அதிக உற்பத்தி செய்யும் நாடுகளாகும். தேயிலை, இந்தியாவில் அஸ்ஸாம், மேற்கு வங்காளம், கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் வளர்க்கப்படுகிறது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் முன்னேற்றத்தால் வள ஆதாரங்களை மனிதன் தேவைக்காக வேளாண்பயிர்களையும் புதிய பொருளாக மாற்றியமைக்க ஆரம்பித்தான். இத்தகைய நடவடிக்கைகள் இரண்டாம்நிலைத் தொழில்கள் என அழைக்கப்படுகின்றன. இதனைப் பின்வரும் பாடங்களில் விரிவாகக் காண்போம்.

## பயிற்சி

### I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. _________ மனிதனது அடிப்படை உணவாகும்.
2. உலகின் சிறந்த வகை _________ பயிர்கள் மித வெப்பமண்டலப் புல்வெளிகளிலிருந்து கிடைக்கிறது.
3. இந்தியாவில் மகாராஷ்டிரம், குஜராத் மற்றும் தமிழ்நாடு _________ உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்கள் ஆகும்.
4. நெல் ஒரு _________ மண்டலப் பயிராகும்.

### II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக .

1. உலகின் நெல் உற்பத்தியில் _________ சதவிகிதம் ஆசியாவில் விளைவிக்கப்படுகிறது.

   அ) 98　　ஆ) 80　　இ) 75

2. இந்தியாவில் உத்திரப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் அரியானா _________ அதிக அளவு உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும்.

   அ) நெல்　　ஆ) கரும்பு　　இ) கோதுமை

3. தேயிலை ஒரு _________ செடியாகும்.

   அ) மிதவெப்ப மண்டல　　ஆ) அயன மண்டல　　இ) நிலநடுக்கோடு

4. பருத்தி _________ மண்ணில் அதிகமாக விளைகிறது.

   அ) கரிசல்　　ஆ) வண்டல்　　இ) பாலை

5. இந்தியா மற்றும் வங்காள தேசம்________ உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றன.

அ) பருத்தி  ஆ) சணல்  இ) கோதுமை

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. விதை பிரிக்கும் செயல் | கோதுமை |
| 2. ஊறவைத்து மக்கச் செய்தல் | கரும்பு |
| 3. களிமண் கலந்த வண்டல் மண் | பருத்தி |
| 4. வண்டல் மண் | சணல் |
| 5. உயரமான அயனப் புல் வகை | நெல் |

### IV) சுருக்கமான விடையளிக்க.

1. கோதுமை விளைவிக்க ஏற்ற சூழ்நிலைகள் யாவை ?
2. விதை பிரிக்கும் முறை என்றால் என்ன ?
3. பருத்தியை அதிக அளவு உற்பத்தி செய்யும் நாடுகள் யாவை ?
4. ஊறவைத்து மட்கச் செய்தல் என்றால் என்ன ?
5. கரும்பு விளைப்விப்பதில் முன்னிலையில் உள்ள நாடுகள் யாவை ?

### V) விரிவான விடையளிக்க.

1. நெல் மற்றும் கோதுமை விளைவிப்பதற்கு தேவையான சூழ்நிலைகளை ஒப்பிடவும் மற்றும் வேறுபடுத்தி காட்டவும்.
2. தேயிலை விளைவிக்க தேவையான சூழ்நிலைகளைப் பற்றி ஒரு பத்தில் எழுதுக.

### VI) செய்முறைப் பயிற்சி.

1. சணலால் செய்யப்படும் பொருட்களின் பெயர்களைச் சேகரித்து எழுதுக.
2. உலக வரைபடத்தில் கோதுமை, நெல் மற்றும் சணல் உற்பத்தி செய்யும் நாடுகளைக் குறிக்கவும்.

## உருவாக்க மதிப்பீடு

**I. நில வரைபடத்திறன் :**

1. உலகப் புறவரி படத்தில் கோதுமை, பருத்தி மற்றும் சணல் உற்பத்தி செய்யும் பகுதிகளைக் குறிக்கவும்.

**II. அறிக்கை தயாரித்தல்:**

சணலால் செய்யப்படும் பொருள்களின் படங்களைச் சேகரித்துக் குறிப்பு எழுதுக.

**III. உரிய சொற்களைக் கண்டுபிடியுங்கள்:**

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | ல | சா | ஜி | ன் | னி | ங் | இ | ரு | ந் | து | வ | ல | ம் | அ |
| ந் | க | லை | ச | இ | ட | மி | ரு | ந் | து | வ | ல | ம் | க | வை |
| தி | ங் | க | ந் | அ | உ | கு | இ | ச | கு | ங் | மி | உ | வெ | எ |
| யா | க | ளை | தை | வை | ங் | வி | நு | ண் | ணு | யி | ரி | ய | ல் | ங் |
| வி | ள் | ப் | க் | எ | க | ரு | ம் | தை | வா | நி | டி | வா | று | கு |
| ல் | தா | ப | கு | ங் | ளு | ப் | பு | க் | டு | ங் | மி | னி | லி | உ |
| உ | னி | ட் | அ | கு | நி | ல | வெ | ளி | ளு | க | ற் | மி | நா | ங் |
| ள் | ய | டி | ரு | இ | ட | மி | ரு | ந் | து | வ | ல | ம் | ற் | க |
| ள | ங் | ய | கி | அ | உ | கு | கு | ந் | கு | வா | ட | மி | று | ளு |
| வா | க | லி | ல் | வை | இ | ரு | ந் | து | வ | ல | ம் | வ | ந | க் |
| க | ள் | டு | உ | எ | ங் | தி | னை | வ | கை | க | ள் | அ | டு | கு |
| ன | ல | க | ள் | ங் | க | ரு | ற் | கு | மி | ல | கு | வை | த | வி |
| தொ | க | ள் | ள | கு | ளு | ப் | சா | து | வா | ங் | மா | எ | ல் | ரு |
| ழி | ங் | ட | தொ | க | ளை | எ | டு | த் | த | ல் | ன | ங் | மா | ப் |
| ற் | க | இ | ழி | ட | மி | ரு | ந் | து | வ | ல | ம் | கு | ன | ப |

சமூக அறிவியல்

1. விதைகளைப் பிரித்தெடுக்கும் முறை.
2. சணல் பிரித்தெடுக்க ஊறவைத்து மட்கச் செய்யும் முறை.
3. சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற வறண்ட பயிர்கள்.
4. புல்வகைத் தாவரங்களிலிருந்து பெறப்படும் மாவுச்சத்துக் கொண்ட விதைகள்.
5. தேவையற்ற செடிகளை நீக்கும் முறை.
6. நெற்பயிர் விளைவித்தலில் உள்ள ஒரு முக்கிய படிநிலை.
7. புவி மேற்பரப்பில் காணப்படும் நிலத்தோற்றங்கள்.

**IV. கலந்துரையாடுக:**

நேற்று நீங்கள் புசித்த உணவைப் பற்றி பின்வரும் தலைப்புகளில் கலந்துரையாடுக.

அ. 1. அவ்வுணவில் சேர்க்கப்பட்ட பொருட்கள் யாவை?

2. அவ்வுணவுப் பொருள்கள் எங்கிருந்து பெறப்பட்டது?

ஆ. 3. ஒவ்வொரு சக மாணவர் வீட்டிலும் உணவு ஏன் வேறுபாடு உடையதாக உள்ளது?

"வடஇந்திய மற்றும் தென்இந்திய பாரம்பரிய உணவு வகைகள்"

அன்றாட பயன் பாட்டிலுள்ள தென் இந்திய உணவு வகைகளையும் வட இந்திய உணவு வகைகளையும் திட்ட மிடுக.

| உணவு நேரங்கள் | தென் இந்தியா | வட இந்தியா |
|---|---|---|
| காலைச் சிற்றுண்டி | | |
| மதிய உணவு | | |
| இரவுச் சாப்பாடு | | |

சமூக அறிவியல்

## 3. தொழிற்சாலைகள்

நமது புவிக்கோளம் கனிம வளங்கள் மற்றும் வேளாண்மைத் தொழிலுக்குத் தேவையான இயற்கை வளங்களைக் கொண்டது. இவ்வளங்களை நாம் இயற்கையில் கிடைக்கக் கூடிய உருவத்திலேயே பயன் படுத்த முடியாது. அவ்வளங்கள் சில செயல் முறைக்கு உட்படுத்தப்பட்டு பயன்தரும் பொருளாக மாற்றப்பட வேண்டியுள்ளது.

தொழிலகங்கள் எனப்படுவது இயந்திரங்களின் உதவிகொண்டு மூலப்பொருட்களை முடிவுற்று பொருட்களாக தொழிலகங்களில் மாற்றும் இடம் ஆகும். மூலப் பொருளை முடிவுற்று பொருளாக மாற்றும் இச் செயல் முறையே 'உற்பத்தி செய்தல்' என்றழைக்கப்படுகிறது. இச் செயல் முறையின் போது உற்பத்தியில் பொருட்களின் மதிப்பு கூடுவதால் மனிதனுக்கு பயன்தரும் வகையில் தயாரிக்கப்படுகிறது.


இதற்கு எடுத்துக்காட்டாக பருத்தியை எடுத்துக்கொள்ளாம். பருத்தி நூலாக்கப்பட்டு, துணியாக நெய்யப்பட்டு, சாயம் ஏற்றப்பட்டு ஆடையாக மனிதனுக்கு பயன்படும் வகையில் மாற்றப்படுகிறது. மரமானது இருக்கைகளாகவோ, காகிதமாகவோ மாற்றப்படுகிறது. சிலிகா கண்ணாடியாக மாற்றப்படுகிறது மற்றும் தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள் ஆபரணமாக மாற்றப்படுகிறது.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட தொழிற்புரட்சி தொழிலகங்களில் மிக அதிக அளவில் உற்பத்தி செய்ய வழிவகுத்தது. தொழிலகங்களில் நிலக்கரியே முதலில் பயன்படுத்தப்பட்ட எரிபொருளாகும். இன்று பொருளாதார வளர்ச்சி ஒரு நாட்டில் அது கொண்டுள்ள தொழிலகங்களின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

இந்தியாவில் தொழிலக வளர்ச்சி இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னே வளர்ச்சி கண்டது. இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களே இந்திய தொழிலக வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியது. மற்ற காரணிகளை விட தொழிலகங்கள் அமைப்பதற்கு மிக முக்கியமாக அமைவது பெரிய அளவு முதலீடு ஆகும். எடுத்துக்காட்டாக சர்க்கரைத் தொழிற்சாலைகள் கரும்பு விளையும் பகுதிக்கு அருகாமையிலேயே நிறுவப்பட வேண்டியதாக உள்ளது. ஏனெனில் கரும்பை வயல்களிருந்து தொழிலகங்களுக்கு எடுத்துச் செல்ல போக்குவரத்து செலவு அதிகமாவதும் மற்றும் அதன் இனிப்புத்தன்மை 24 மணிநேரத்திற்குள் குறையும் தன்மையை பெற்றிருப்பதும் ஆகும்.

### தொழிற்சாலையின் அமைவிடக் காரணிகள்

தொழிற்சாலைகளை எல்லாப் பகுதிகளிலும் அமைக்க இயலாது. ஒரு தொழிற்சாலை தொடங்கப்படுவதை பல்வேறு முக்கிய அமைவிடக்காரணிகள் நிர்ணயிக்கின்றன. இவை புவியியல் காரணிகளாகவோ, மக்களின் வாழ்வியல் காரணிகளாகவோ இருக்கலாம். இக்காரணிகள் தெளிவாகப் படம்-42இல் காட்டப் பட்டுள்ளது.



படம் –16. தொழிற்சாலையின் அமைவிடக் காரணிகள்

### 1. மூலப்பொருட்கள்

சில தொழிற்சாலைகளுக்குக் கனமான, அதிகளவு மூலப்பொருட்கள் தேவைப்படும். அத்தகைய தொழிற்சாலைகள் நேரம் மற்றும் போக்குவரத்துச் செலவைக் குறைப்பதற்காக அம்மூலப்பொருள்கள் கிடைக்கும் இடங்களின் அருகிலேயே நிறுவப்படுகிறது. இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் பெரும்பாலும் நிலக்கரி அல்லது இரும்பு கிடைக்கும் சுரங்கங்களுக்கு அருகிலேயே அமைக்கப்படும். எடுத்துக்காட்டாக, டாடா இரும்பு எஃகுத் தொழிற்சாலை, இராணிகன்ச், ஜாரியா மற்றும் பொக்காரோ நிலக்கரி வயல்களுக்கு அருகிலேயே அமைந்துள்ளது.

### 2. பணியாளர்கள்

தொழிற்சாலைகள் இயங்க அதிக எண்ணிக்கையிலான குறைந்த ஊதியம் பெற்றுக் கொள்ளும் பணியாளர்கள் அல்லது மனிதசக்தி அதிகமாகத் தேவைப்படுகிறது. எனவே தொழிற்சாலைகள் மக்கள்தொகை அதிகமாக உள்ள இடங்களில் அமைக்கப்படுகிறது. இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகள் அதிக எண்ணிக்கைக் கொண்ட குறைந்த ஊதியம் பெற்றுக்கொள்ளும் பணியாளர்களைக் கொண்ட நாடுகளாகும்.

பணியாளர்களைக் குறிப்பிட்ட தொழில்நுட்பம் தெரிந்த பணியாளர்கள் எனவும் ஓரளவு தொழில் நுட்பம் தெரிந்த பணியாளர்கள் எனவும் இரு

பிரிவுகளாகப் பிரிக்கலாம். வைரம் அறுக்கும் தொழிற்சாலை சூரத்தில் அமைந்துள்ளது.அத்தொழில் நுட்பம் மிக்க பணியாளர்கள் அங்கு அதிகம். ஆனால் பொருள்களை அடுக்கிக்கட்டும் (packing) தொழிற்சாலைகள் எவ்விடத்திலும் நிறுவலாம் இத் தொழிற்சாலைகளுக்குக் குறிப்பிட்ட தொழில் நுட்பம் தெரிந்த பணியாளர்கள் தேவை என்ற அவசியம் இல்லை.

### 3. எரிபொருள்

இயந்திரங்களை இயக்குவதற்கு எரிபொருள் அடிப்படைத் தேவையாகும். தொழிற்துறை, உலகின் 70% எரிபொருள் சக்தியை இயந்திரங்கள் இயக்கப் பயன்படுத்திக் கொள்கிறது. அனல் மின் சக்தி (நிலக்கரி) மற்றும் நீர் மின் சக்தி ஆகியவை தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் முக்கியமான எரிபொருள்களாகும். இவ்வெரிபொருட்கள் எளிதாகக் கிடைக்கும் இடங்களில் தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றன.

### 4. மூலதனம்

மூலதனம் அல்லது பணம், எந்த ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கும் தேவையான ஒன்றாகும். தொழற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து இடு பொருட்களை (INPUT) வாங்க இது தேவைப்படுகிறது.சில தொழிற்சாலைகள் இயங்க அதிக மூலதனமும், சில தொழிற்சாலைகள் இயங்க குறைவான மூலதனமும் தேவைப்படுகிறது. பெரிய தொழிற்சாலைகள் எனில், உற்பத்தித் திறன் அதிகரிக்கும் பொழுது மூலதனமும் அதிகரிக்கிறது. எங்கு முதலீடு செய்வதற்கு மூலதனம் அதிகமாகக் கிடைக்கிறதோ, அங்குத் தொழிற்சாலைகள் வளர்ச்சியடையும்.

### 5. போக்குவரத்து

தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யத் தேவைப்படும் மூலப்பொருள்கள், அது கிடைக்கும் இடத்திலிருந்து தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்லவும் போக்குவரத்து மிக முக்கியமானது ஆகும். எனவே, குறைவான செலவில் வேகமாக இயக்கப்படும் போக்குவரத்து தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படுகிறது. எனவே போக்குவரத்து வளர்ச்சி அதிகம் உள்ள பகுதிகளில் தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றன.

### 6. சந்தை

உதிரிப்பாகங்களை இணைத்துப் பல பொருள்களை உற்பத்தி செய்யும் சில தொழிற்சாலைகள் சந்தைக்கு அருகிலேயே நிறுவப்படுகிறது. எடுத்துக்காட்டாக வாகன உற்பத்தி தொழிற்சாலை, பால்பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் எளிதில் உடையக்கூடிய நுட்பமான கண்ணாடி பொருள்களை தயாரிக்கும் தொழிற்சாலைகளும் சந்தைக்கு அருகிலேயே நிறுவப்படுகின்றன. ஏனெனில், அவை விரைவில் அழுகக்கூடிய (பால், பழம் போன்ற பொருள்கள்), உடையக்கூடிய (கண்ணாடி) பொருட்களாகும்.

ஒன்று அல்லது பல்வேறு புவியியல் காரணங்கள் மற்றும் மனித வாழ்வியல் காரணங்கள் உலகளவில் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான காரணிகளாய் அமைகிறது. காலநிலை, நீர்வசதி போன்ற பல காரணங்களும் தொழிற்சாலை நிறுவுவதற்கான காரணிகள் ஆகும்.

பயிற்சி

I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியாவில் __________ க்கு பின்னரே தொழிலக வளர்ச்சி ஏற்பட்டது.
2. தொழிற்சாலைகள் தொடங்கப்படுவதை__________ மற்றும்__________ காரணிகள் நிர்ணயிக்கின்றன.
3. கனமான மூலப்பொருள்களைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள்__________ கிடைக்கும் இடங்களுக்கு அருகிலேயே தொடங்கப்படுகின்றது.
4. இயந்திரங்களை இயக்குவதற்கு __________ அடிப்படை தேவையாகும்.
5. எளிதில் உடையக்கூடிய, நுட்பமான கண்ணாடிப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள்__________அருகிலேயே நிறுவப்படுகின்றன.

II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எளிதில் உடையக்கூடிய நுட்பமான பொருட்கள்
   அ) கண்ணாடிப் பொருள்கள்  ஆ) காய்கறிகள்  இ) வண்டிகள்
2. தொழிற்புரட்சியை ஏற்படுத்திய எரிபொருள்__________ஆகும்.
   அ) எண்ணெய்  ஆ) வாயு  இ) நிலக்கரி
3. பொதுவாக__________நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகிலேயே அமைக்கப்படும்.
   அ) அலுமினியம் தொழிற்சாலை  ஆ) இரும்பு எஃகுத் தொழிற்சாலை
   இ) கப்பல் கட்டும் தொழிற்சாலை
4. வைரம் அறுக்கும் தொழிற்சாலைக்கு__________பணியாளர் தேவைப்படுகிறது.
   அ) குறிப்பிட்ட தொழில்நுட்பம் தெரிந்த  ஆ) தொழில்நுட்பம் தெரியாத
   இ) ஓரளவு தொழில்நுட்பம் தெரிந்த

III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. அதிகளவு பொருள் உற்பத்தி | ஓரளவு தொழில்நுட்பம் தெரிந்த பணியாளர்கள் |
| 2. இரும்பு எஃகுத் தொழிற்சாலை | சந்தையினை மையமாகக் கொண்டு |
| 3. ஜாரியா | தொழிற்புரட்சி |
| 4. பொருள்களை அடுக்கிக்கட்டும் தொழிற்சாலை | நிலக்கரிச் சுரங்கம் |
| 5. உதிரிப்பாகங்களை இணைக்கும் தொழிற்சாலை | மூலப்பொருள்கள் |

## IV) சுருக்கமாக விடையளிக்க.

1. தொழிற்சாலை என்றால் என்ன ?
2. ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு ஏற்ற அடிப்படைக்காரணிகள் யாவை ?
3. இரண்டாம் நிலை தொழில்களில் சிலவற்றைக் குறிப்பிடுக.
4. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களின் வகைகளைக் கூறுக.

## V) ஒரு பத்தியில் விடையளிக்க.

1. ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு மூலதனம் எங்ஙனம் முக்கிய பங்கினை அளிக்கிறது ?
2. தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு மூலதனம் ஆற்றும் முக்கிய பங்கினைப் பற்றி விவரிக்க.

## VI) விரிவாக விடையளிக்க.

1. ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கும் வளர்ச்சியடைய செய்வதற்கும் ஏற்ற காரணிகளைப் பற்றி விரிவாக எழுதுக.

## VII) செய்முறைப் பயிற்சி.

1. நீங்கள் வசிக்கும் பகுதியின் அருகிலுள்ள ஏதேனும் இரண்டு தொழிற்சாலைகளின் அமைவிடக் காரணிகளைப் பட்டியலிடுக.

## உருவாக்க மதிப்பீடு

**I. அறிக்கை தயாரித்தல் :**

1. நீங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள ஏதேனும் இரண்டு தொழிற்சாலைகளின் அமைவிடக் காரணிகளைப் பட்டியலிட்டு குறிப்பெழுதுக.
2. பின்வரும் தொழிலகங்களுக்குத் தேவைப்படும் மிக முக்கிய இரண்டு காரணிகளைப் பற்றி எழுதுக.

   மேலும் ஏதேனும் இரண்டு தேவையான காரணிகளையும் சேர்க்கவும்.

   அ. இரும்பு எஃகுத் தொழிற்சாலை : சந்தை / மூலப்பொருள்கள்

   ஆ. கடிகாரத் தொழிற்சாலை : தொழில்நுட்பப் பணியாளர்கள் / நிலம்

   இ. கம்பளித் தயாரிப்பு : எரிபொருள் / சந்தை

**II. நில வரைபடத்திறன் :**

இந்தியப் புறவரிப் படத்தில் பின்வரும் தொழில் மையங்களைக் குறிக்கவும்.


1. ஐந்து இரும்பு எஃகுத் தொழிற் மையங்கள்
2. இரண்டு பருத்தி நெசவு தொழிலகங்கள்
3. சர்க்கரை தொழிற்சாலை உள்ள இரண்டு வட்டாரங்கள்
4. கப்பல் கட்டும் தொழிற்சாலை

## இரண்டாம் நிலைத் தொழில் II

## 4. தொழிலகங்களின் வகைகள்

ஒரு நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சிக்குத் தொழிலகங்களின் வளர்ச்சி மிக முக்கியமானதாகும். அதனால் நாட்டின் வருவாய் வளர்ச்சி பெறுவதோடு மக்களுக்கு வேலைவாய்ப்பையும் தருகிறது.

மூலப்பொருள், தொழில் உரிமம், மூலதன அளவு மற்றும் உற்பத்தியாகும் பொருள் ஆக்கியவை தொழிலகங்களில் அமைவிட காரணியாகும்.




தொழிலகங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம். (படம்–17)

### 1. மூலப்பொருள்களின் அடிப்படையில் உள்ள வகைகள்

தொழிலகங்களில் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களின் அடிப்படையில் தொழிலகங்களின் வகைகள் காடுகள் சார்ந்த தொழிலகம், வேளாண்மை சார்ந்த தொழிலகம் மற்றும் கனிமம்சார்ந்த தொழிலகம் எனப் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப் படுகின்றன.

### அ. காடுகள் சார்ந்த தொழிலகம்

இவ்வகை தொழிலகங்களுக்குக் காடுகளிலிருந்து மூலப்பொருள்கள் கிடைக்கப் பெறுகின்றன. எடுத்துக்காட்டுகளாகக் காகிதத் தொழிற்சாலை, அறைகலன் இருக்கைகள் செய்தல் (படம்–18) போன்ற தொழில்கள், இவ்வகை தொழிலகங்களில் அடங்கும்.



படம்–18. அறைகலன்கள் செய்தல்

### ஆ. வேளாண்பொருள் சார்ந்த தொழிலகங்கள்

இவ்வகை தொழிலகங்கள் வேளாண்பொருள்களை மூலதனமாகக் கொண்டு பருத்தி மற்றும் சணல் பொருள்கள் மற்றும் சர்க்கரை போன்ற பொருள்களை உற்பத்தி செய்கின்றன.

### இ. கனிமங்கள் சார்ந்த தொழிலகங்கள்

இவ்வகை தொழிலகங்களுக்கு கனிமப் பொருள்கள் மூலப் பொருள்களாகின்றன. இரும்பு, எஃகு, சிமெண்ட், அலுமினியம் மற்றும் இரசாயனப் பொருள்கள் இவ்வகை தொழிலகங்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். (படம்–19)



படம்–19 - சிமெண்ட் தொழிற்சாலை

### 2. அமைவிடக் காரணம் சார்ந்த தொழிலகங்கள்

### அ. மூலப்பொருள் தன்மை பொருத்து செயல்படும் தொழிலகங்கள்

இவ்வகை தொழிலகங்கள் மூலப்பொருள்கள் கிடைக்குமிடத்திற்கு அருகிலேயே நிறுவப்படுகின்றன. ஏனெனில் சில மூலப்பொருள்கள் கனமான மூலப் பொருளாகவோ தனித்தன்மை கொண்ட மூலப்பொருளாகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டு: இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள், நிலக்கரி மற்றும் இதர கனமான மூலப்பொருள் கிடைக்குமிடங்கள் அருகில் அமைகின்றன. சர்க்கரை தொழிற்சாலை கரும்பு விளையும் வயல்களுக்கு அருகில் நிறுவப் படுகின்றன. ஏனெனில் கரும்பு அறுவடை செய்யப்பட்டு கரும்புச் சாற்றைச் சரியான நேரத்திற்குள் பதப்படுத்தவேண்டிய அவசியம் உள்ளது. இல்லையெனில் கரும்பின் இனிப்புத்தன்மை குறைய வாய்ப்புள்ளது.

### ஆ. சந்தை சார்ந்த தொழிலகங்கள்

இவ்வகைத் தொழிலகங்கள் சந்தைக்கு அருகிலேயே நிறுவப்படுகின்றன. ஏனெனில், பொருள்கள் அழுகும் தன்மை அல்லது கெட்டுப்போகும் தன்மை உடையதாக மாற வாய்ப்பு உள்ளது. எடுத்துக்காட்டு: பால் பண்ணைப் பொருள்கள்

### இ. சிதறிக் காணப்படும் தொழிலகங்கள் (Foot Loose)


இவ்வகை தொழிலகங்கள் எவ்விடத்திலும் நிறுவப்படலாம். ஏனெனில், இதன் மூலப்பொருள்கள் சிறிய மற்றும் லேசான பொருள்களே. எடுத்துக்காட்டு : கடிகாரம் தயாரிக்கும் தொழிலகங்கள்.

### 3. உற்பத்தித்திறன் அளவு அடிப்படையில் உள்ள வகைகள்

உற்பத்தித்திறன் அளவு அடிப்படையில் அதிக உற்பத்தி தொழிலகங்கள், மிதமான உற்பத்தி, சிறிய அளவு உற்பத்தித் திறன் கொண்ட தொழிற்சாலைகள் உள்ளன.

### அ. பெரிய அளவில் உற்பத்தித் திறன் கொண்ட தொழிலகங்கள்

இவ்வகைத் தொழிலகங்களுக்குப் பெரிய அளவில் மூலதனம், கனமான



படம்-20. பெரிய அளவு உற்பத்தித் தொழிற்சாலை

ஞாயிறு அங்கம்

இயந்திரங்கள் மற்றும் அதிக அளவில் பணியாளர் எண்ணிக்கை அவசியமாகிறது. எடுத்துக்காட்டாக: இரயில் பெட்டி தொழிற்சாலை–சென்னை, டாடா இரும்பு எஃகுத் தொழிற்சாலை–ஜம்ஷெட்பூர், BHEL–திருச்சி, SAIL–சேலம் (படம்–20).

### ஆ) மிதமான அளவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை

இத்தகைய தொழிற்சாலை அளவில் குறைவாகக் காணப்படினும் மூலதனம், தொழில் நுட்பத்தையும் சார்ந்தே அமைக்கப்படுகிறது. கணினி தொழிலகங்கள், மின்னணு தொழிலகங்கள் ஆகியவை இவற்றுக்குச் சான்றாகக் கூறலாம். (படம்–21)



படம்–21. மின்னனு தொழிலகங்கள்

### இ) சிறிய அளவு உற்பத்தி செய்யும் தொழிலகங்கள்

இத்தகைய தொழில் நிறுவனங்கள் சிறிய அளவு மூலதனங்களையும், குறைந்த பணியாளர்களையும் கொண்டு காணப்படுகிறது. வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள் இத்தகைய தொழிலகங்களில் உற்பத்தி செய்யப்படலாம். கைவினைப் பொருள்கள், எழுது பொருள்கள் போன்ற தயாரிப்புகள் எடுத்துக்காட்டுகளாகும் (படம்–22).



படம்–22. கைத்தறிப்பொருள்கள்

### ஈ.) கைத்தொழில்கள்

பொதுவாக இவ்வகைத் தொழில்கள் ஒரு சிறுகுடும்பம், இத்தொழிலினை நடத்துவதைக் காணலாம். இத்தகைய தொழில்களில் எல்லாவிதமான கைவினைப்பொருள்கள், கைத்தறி, ஆபரணம் தயாரித்தல், பானை செய்தல் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. மூதாதையர்கள் செய்துவந்த தொழிலினைப் பரம்பரை பரம்பரையாகச் செய்துவருபவர்களாகவும் இக்கைவினைஞர்கள் இருப்பார்கள்.



படம்–23. கைத்தொழில்–பானை செய்தல்

சமூக அறிவியல்

### 4. உற்பத்தி செயல்முறைகள் சார்ந்த தொழிலகங்கள்

உற்பத்தி செயல்முறைகளைப் பொருத்து தொழிலகங்கள் கனரக தொழிற்சாலை, கனமற்ற பொருள் உற்பத்தி தொழிற்சாலை என பிரிக்கப்படுகிறது.

#### அ. கனரக தொழிற்சாலை

இவ்வகை தொழிலகங்கள் அதிக கனமுள்ள மூலப்பொருள்கள் மற்றும் கனமுள்ள உற்பத்தி பொருள் தயாரிக்கும் தொழிலகங்கள் ஆகும். இவை அதிக மூலதனத்தையும், வளங்களையும் கொண்டு, அதிக அளவில் உற்பத்தி செய்யும் தொழிலகங்களாகும். டிஸ்கோ(TISCO) என அழைக்கப்படும் இரும்பு எஃகுத் தொழிலகங்கள், பெல் (BHEL) எனப்படும் கனரகத் தொழிலகம் மற்றும் வாகனத் தொழிலகம்இவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாகும் (படம்–24).



படம்–24. BHEL – திருச்சி

#### ஆ. கனமற்ற தொழிலகங்கள்

இத்தகைய தொழிலகங்களில் மூலப்பொருள்களும், முடிவுற்ற உற்பத்தி பொருள்களும் அதிக கனமின்றி லேசான பொருள்களாக இருக்கும். அவை குறைந்த மூலதனத்துடன் நுகர்வோர் சார்ந்த தொழில்களாக இருக்கும். கடிகாரம் தயாரித்தல், உறைகள் தயாரிக்கும் தொழில் மற்றும் வீட்டுச் சாமான்கள் ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

### 5. பணிகளின் தன்மை சார்ந்த தொழிலகங்கள்

பணிகளின் தன்மையைக் கொண்டு, தொழிலகங்கள் பதப்படுத்தும் தொழிலகங்கள், உற்பத்தி செய்யும் தொழிலகங்கள், பாகங்கள் இணைக்கும் தொழிலகங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.


#### அ. பதப்படுத்தும் தொழிலகங்கள்

இவ்வகை தொழிலகங்கள் மூலப்பொருள்களையோஅல்லது முடிவுற்ற பொருள்களையோ பதப்படுத்தும் தொழிலைச் செய்கின்றன. தோல்பதனிடும் தொழிலகங்களில் தோலினைப் பதப்படுத்தி(படம்-25)தோல் பொருள்களாக மாற்றும் செயல்கள், பஞ்சிலிருந்து விதைகளைப் பிரித்தெடுக்கும் செயல்கள் மற்றும் உலோக மூலப்பொருள்களிலிருந்து உலோகத்தை உருக்கும் செயல்களும் இவ்வகை தொழில்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.



படம்–25. தோல் பதனிடும் தொழிற்சாலை

## உலகின் தொழில்துறை வட்டாரங்கள்




படம்-27

### ஆ. உற்பத்தி செய்யும் தொழிலகங்கள்

இவ்வகை தொழிலகங்கள் மூலப்பொருள்களை அல்லது முடிவுற்ற பொருள்களை உற்பத்திப் பொருள்களாக மாற்றும் பணியினைச் செய்கின்றன. எடுத்துக்காட்டாக நூலிழைகளைத் துணிகளாக மாற்றும் ஜவுளித் தொழிலகங்கள், இரும்பு எஃகு உருக்காலைகள், இரும்பை இயந்திரங்களாகச் செய்தல், மரத்தை மரப்பொருள்களாகச் செய்தல், ஆகியவற்றைக் கூறலாம்.

### இ) பாகங்களை இணைக்கும் தொழிலகங்கள்

முடிவுற்ற பொருள்களை இணைத்து புதிய பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள், பாகங்கள் இணைக்கும் தொழிலகங்கள்என அழைக்கப்படுகின்றன. வாகனத் தொழிலகங்கள் மற்றும் கணினிப் பாகங்கள் இணைக்கும் தொழிலகங்கள் இவ்வகைத் தொழில்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும் (படம்–26).



படம்–26. பாகங்கள் இணைக்கும் தொழிற்சாலைகள்

### 6. உடைமைத் தன்மை

உடைமைத் தன்மையைப் பொறுத்துப் பொதுத்துறை தொழிலகங்கள் மற்றும் தனியார்துறைத் தொழிலகங்கள் என இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

### அ. பொதுத்துறை

இவ்வகை தொழிலகங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாகும் BHEL மற்றும் SAIL ஆகிய தொழிலகங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

### ஆ. தனியார்த் துறை

இவ்வகை தொழிலகங்கள், தனிமனிதன் சொந்தமாகவோ ஒரு சிறு குழுமமாகவோ செயல்படும் தொழிலகங்களாகும். எடுத்துக்காட்டு: ரிலையன்ஸ்.

உற்பத்தி செய்யும் தொழிலகங்கள் பொருளாதாரத்தின் அதிக பொருள் மற்றும் நலன் தரும் துறையாகும்.

தொழிலகங்களின் வளங்கள் பொருளாதார மேம்பாட்டிற்குப் பெரும் பங்களிக்கின்றன. பொருளாதார மேம்பாடு அடைந்த நாடுகள் (படம்–27) என்பன மிக சிறப்பாக வளர்ந்த தொழில்துறைகள் காணப்படும் நாடுகளாகும்.

## பயிற்சி

### I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. லேசான அல்லது கனமற்ற மூலப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கும்__________ தொழிற்சாலைகள் எங்கு வேண்டுமானாலும் நிறுவப்படலாம்.
2. வாகனத் தொழிற்சாலை ஒரு__________தொழிற்சாலையாகும்.
3. __________ தொழிற்சாலைகள் சந்தைகளுக்கு அருகே நிறுவப்படுகின்றன.
4. கைத்தறித் தொழில்கள்__________ தொழிலகங்களுக்கு எடுத்துக்காட்டாகும்.
5. பதப்படுத்தும் தொழில்கள் மூலப்பொருள்களை__________பொருள்களாக மாற்றியமைக்கிறது.

### II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தனியார் நிறுவனத்திற்கு எடுத்துக்காட்டு

   அ) ரிலையன்ஸ் ஆ) பெல்(BHEL)

   இ) பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL)

2. பெரிய அளவில் உற்பத்தித்திறன் கொண்ட தொழிலகங்களுக்கு _______ முதலீடு தேவை.

   அ) அதிக ஆ) மிதமான இ) குறைவான

3. அறைகலன்கள் செய்யும் தொழிலகங்கள் __________ தொழிலகங்களுள் அடங்கும்.

   அ) காடுகள் சார்ந்த ஆ) வேளாண் பொருள்கள் சார்ந்த

   இ) கனிமங்கள் சார்ந்த

4. பருத்தி தொழிற்சாலை ஒரு__________தொழிலாகும்.

   அ) கைத்தொழில் சார்ந்த ஆ) உதிரிப் பாகங்களை இணைக்கும்

   இ) வேளாண் பொருள் சார்ந்த

5. சர்க்கரைத் தொழிற்சாலை__________சார்ந்த தொழிலகமாகும்.

   அ) மூலப்பொருள் ஆ) சிதறிக்காணப்படும் இ) சந்தை

### III) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | விதை பிரித்தல் முறை | இரும்பு எஃகுத்தொழிற்சாலை |
| 2. | பதப்படுத்துதல் | கனரகத் தொழிற்சாலை |
| 3. | உருக்குதல் | பருத்தித் தொழிற்சாலை |
| 4. | மூலதனம் | கைத்தறித் தொழிற்சாலை |
| 5. | நெசவு | தோல் தொழிற்சாலை |

## IV) சுருக்கமான விடையளிக்க.

1. அமைவிடத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளின் பிரிவுகளை எழுதுக.
2. உற்பத்தி அளவினை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலைகள் எங்ஙனம் வகைபடுத்தப்படுகின்றது ?
3. உதிரிப்பாகங்களை இணைக்கும் தொழிற்சாலை என்றால் என்ன ?
4. கனமற்ற தொழிலகங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
5. கைத்தொழில்களின் பண்புகளை எழுது.

## V) ஒரு பத்தியில் விடையளிக்க.

1. பெரிய அளவு உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளுக்கும் சிறிய அளவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கும் உள்ள வேறுபாடு யாவை ?
2. மூலப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளதை விவரி.

## VI) விரிவாக விடையளிக்க.

1. தொழிற்சாலைகள் எங்ஙனம் வகைப்படுத்தப்படுகின்றன ? விளக்குக.

## VII) செய்முறைப் பயிற்சி.

1. நீங்கள் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு வகையான ஏதேனும் பத்துத் தொழிற்சாலைகளைப் பட்டியலிடுக.

## உருவாக்க மதிப்பீடு

**I. அறிக்கை தயாரித்தல்:**

1. நீங்கள் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு வகையான ஏதேனும் பத்துத் தொழிற்சாலைகளைப் பட்டியலிடுக.
2. வேளாண்மை சார்ந்த ஏதேனும் ஐந்து வகைத் தொழிற்சாலைகளைப் பட்டியலிட்டு பின்வரும் கருத்துகளுக்கு ஏற்ப தகவல்கள் சேகரிக்க.

   அ. பயிர்

   ஆ. இடம்

   இ. உற்பத்திப் பொருள்

   ஈ. உற்பத்தி முறை
3. இந்திய கைத்தொழில்களிருந்து கிடைக்கும் வெவ்வேறு பொருள்களைக் கொண்டு படத்தொகுப்பு செய்யவும்.
4. உனக்கு விருப்பமான கார் எது ?

   அவை எங்கு? எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றது? போன்ற தகவல்களைச் சேகரித்து எழுதவும்.

சமூக அறிவியல்

# 1. மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

சமுதாயத்தில் மனிதன் சுமூகமாக வாழத் தேவையான நிலையை உரிமை என அழைக்கிறோம். இது இல்லையென்றால், அவனால் நலமுடன் வாழ முடியாது. மனித உரிமைகள் மனிதனால் இயற்கையாகப் பெறப்பட்டவை ஆகும்.

பேரறிஞர் பொசாங்கோ கூற்றின்படி, "உரிமைகள் என்பன சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு, அரசால் நடைமுறைப் படுத்தப்படுவதாகும்". மனித உரிமைகள் மனிதர்களின் முழு ஆளுமைத் திறமையை வெளிப்படுத்தி, அவனை முழு வளர்ச்சி அடையச் செய்கிறது. சமூகப் பொருளாதார உரிமைகளும் மனித உரிமைகள் என அறியப்படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மனிதஉரிமைகளைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

> ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் 24 ஆம் நாள் ஐ.நா. தினமாகக் கொண்டாடப்படுகிறது.

## ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பிரகடனம்–1948

1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் நாள் ஐக்கிய நாடுகளின் சபை தோற்றுவிக்கப்பட்டது. இதன் முக்கியமான கோட்பாடுகளில் ஒன்று மனித உரிமைகளை பாதுகாப்பதும், அதனை மதிப்புறச் செய்வதும் ஆகும்.

ஐ.நா. சபையின் ஆலோசனையின் பேரில், மனித உரிமைகளை உருவாக்க, மனித உரிமைகள் குழு அமைக்கப்பட்டது. இக்குழு மனித உரிமைகள் மசோதாவைத் தயாரித்து வழங்கியது. இம்மசோதா, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது. இதுவே "அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்" என்று அழைக்கப்படுகிறது.

> ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் நாள் மனித உரிமைகள் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், மக்களிடையே சமத்துவத்தை உறுதி செய்கிறது. இப்பிரகடனம் 30 சரத்துக்களைக் கொண்டது. இது இரு பகுதிகளாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

1. வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள்.

2. பொருளாதாரம், சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள்.

## வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள்

வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் நவீன ஜனநாயகத்தோடு நெருங்கிய தொடர்பு உடையவைகளாகும்.

அவ்வுரிமைகளாவன:

மக்களின் வாழ்வு, சுதந்திரம் மற்றும் அவர்களின் பாதுகாப்பு உரிமைகள்.

அடிமை முறை மற்றும் சித்திரவதையில் இருந்து விடுதலை.

சட்டத்தின் முன் அனைவரும் சமமாகக் கருதப்படுதல்.

சொத்துரிமை

அரசியலில் ஈடுபடும் உரிமைகள்

திருமணம் செய்து கொள்ளும் உரிமை.

அனைத்து குழந்தைகளுக்கும் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் உரிமை.

தாய்சேய் நலனில் தனிக் கவனம் செலுத்தும் உரிமை, போன்றவைகள் ஆகும்.

## சமூகப் பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள்

ஐ.நா சபை கீழ்க்கண்ட சமூகப் பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகளை வழங்கியுள்ளது.

அவைகளாவன:

வேலை செய்யும் உரிமை.

சமமான வேலைக்குச் சமமான ஊதியம் பெறும் உரிமை.

தொழிற்சங்கத்தை உருவாக்கவும் அல்லது அதில் சேரவும் உரிமை.

தேவையான வாழ்க்கைத் தரத்தினைப் பெறும் உரிமை.

கல்வியறிவு பெறும் உரிமை.

பண்பாட்டுக்களத்தில் சுதந்திரமாகப் பங்கேற்கும் உரிமை போன்றவைகளாகும்.

## மனித உரிமைகள் பாதுகாப்பு

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், அனைத்து நாடுகளுக்கும் ஏற்புடையதாகும். டிசம்பர் 16ஆம் தேதி 1966 ஆம் ஆண்டு ஐ.நா.சபை மனித உரிமைகளைப் பாதுகாக்க இரு ஒப்பந்தங்களை உருவாக்கியது அவைகள்.

1. அனைத்துலகப் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் ஒப்பந்தம்.

2. அனைத்துலக வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம்.

ஐ.நாவின் உறுப்பு நாடுகள் இவ்வுரிமைகளின் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளிக்கக் கடமைப்பட்டுள்ளன. இவ்வாறு ஐ.நா. சபை உலக அளவில் மனித உரிமைப் பாதுகாப்பில் முக்கிய பங்கினை ஆற்றி வருகிறது.

1993 ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் வெளியிடப்பட்ட, தனது பிரகடனத்தில் (வியன்னா பிரகடனம்) மனித உரிமைகளைப் பாதுகாப்பதும், மேன்மையடையச் செய்வதும் பன்னாட்டுச் சமூகத்தின் சட்டப்பூர்வமான நோக்கமாக இருக்க வேண்டும் எனக் கூறியது. இதன்படி இந்திய அரசாங்கம் 1993 ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றி, தேசிய மனித உரிமைகள் ஆணையத்தை டெல்லியில் கி.பி.1993ஆம் ஆண்டு ஏற்படுத்தியது. மாநிலங்களிலும் மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது. இவ்வாணையத்தின் நோக்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும், மேம்பாடு அடையச் செய்வதும் ஆகும்.

## தேசிய மனித உரிமைகள் ஆணையம்

1993–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மனித உரிமைகள் சட்டத்தின்படி தேசிய மனித உரிமைகள் ஆணையம் இந்தியாவில் அக்டோபர் 12, 1993 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாணையம் தலைவர் ஒருவரையும், நான்கு உறுப்பினர்களையும் கொண்டது.

இவ்வாணையத்தின் தலைவர் பொதுவாக ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாவார்.

ஆணையத்தின் ஓர் உறுப்பினர் உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும், மற்றொரு உறுப்பினர் மாநில உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும் மீதமுள்ள இரு உறுப்பினர்கள் மனித உரிமைகள் சார்ந்த செயல் அனுபவமிக்கவராக இருக்க வேண்டும். இவர்களை

குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார்.

### அமைப்பு

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமையிடம் புது டில்லி ஆகும். குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படும் மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரின் ஆணையின் பேரில் பணி நீக்கம் செய்யப்படலாம். ஆணையத்தின் தலைவர் 5 ஆண்டுகளோ அல்லது 70 வயது வரையிலோ இப்பதவியில் பணியாற்றலாம். மற்ற உறுப்பினர்கள் 5 ஆண்டுகள் பதவி வகிக்கலாம். குடியரசுத் தலைவர் விரும்பினால் இவர்களை மீண்டும் 5 ஆண்டுகட்கு மறுநியமனம் செய்யலாம்.

### ஆணையத்தின் பணிகள்

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் முக்கிய நோக்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் ஆகும். மனித உரிமைகள் சம்பந்தமாக ஆய்வுகள் நடத்தி, அது சம்பந்தமான கல்வியறிவினை மக்களிடையே பரப்புவது, இதன் முக்கிய பணியாகும். ஊடகங்கள் மூலமாகவும், கருத்தரங்கம் மூலமாகவும் மனித உரிமை பற்றிய விழிப்புணர்வை ஆணையம் ஏற்படுத்துகிறது. மனித உரிமைகள் மீறப்படும் போது பாதிக்கப்பட்டவர்கள் விண்ணப்பித்தாலோ ஆணையம் தானாகவே முன்வந்து பாதிக்கப்பட்டவர்களை விசாரித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கும்.

தேசிய மனித உரிமைகள் ஆணையம் கீழ்க்கண்டவற்றிற்கு முன்னுரிமை வழங்கி பணியாற்றுகிறது. மக்களின் வாழ்வியல் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், மனித உரிமைகளுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் சட்டத்தினை ஆய்வு செய்யவும், காவல் துறையினரின் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை அகற்றுவது சம்பந்தமாகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் குறைகளைக் களைவதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னுரிமை வழங்குகிறது.

### அதிகாரங்கள்

தேசிய மனித உரிமைகள் ஆணையம் வாழ்வியல் நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருக்கிறது. அரசிற்கு ஆண்டு தோறும் தனது அறிக்கையை இவ்வாணையம் அனுப்புகிறது. அரசாங்கம் இவ்வறிக்கையினைப் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் தாக்கல் செய்து, இதனடிப்படையில் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன அல்லது எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்பதைத் தெரிவிக்கும். இவ்வாறு தேசிய மனித உரிமைகள் ஆணையம் மக்களின் உரிமைகளை காக்க அரசியலமைப்பு காட்டிய நெறிமுறைகளின்படி செயல்பட்டுவருகிறது.

> தற்போது தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் யார் ?

### மாநில மனித உரிமைகள் ஆணையம்

தமிழ்நாட்டில் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் நாள் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.

### அமைப்பு

மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு தலைவரையும், நான்கு

குடிமையியல்

உறுப்பினர்களையும் உள்ளடக்கியது. ஆணையத்தின் தலைவர்—மாநில உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதியாவார். ஆணையத்தின் ஓர் உறுப்பினர் ஓய்வு பெற்ற மாநில உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும், மற்றொரு உறுப்பினர் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியாகவும், எஞ்சிய இரண்டு உறுப்பினர்கள் மனித உரிமைகள் சார்ந்த செயலனுபவம் மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும். ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மாநில முதலமைச்சர், மாநில உள்துறை அமைச்சர், சட்டமன்றத் தலைவர், சட்டமன்ற எதிர்கட்சித்தலைவர் ஆகியோரைக் கொண்ட குழுவின் பரிந்துரையின் பேரில் மாநில ஆளுநர் நியமனம் செய்கிறார். ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகச் செயலர், செயல்படுகிறார். தமிழகத்தில் இவ்வாணையம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. இந்திய அரசியலமைப்பில், பகுதி III இல் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் மீறப்படும் போது இவ்வாணையம் விசாரணைசெய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் அளிக்கும்.

> இப்பொழுது தமிழகத்தின் மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் யார் ?

மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் 70 வயது வரை அல்லது 5 ஆண்டுகள் பணியாற்றலாம். ஆணையத்தின் உறுப்பினர்கள் முறை தவறி செயல்பட்டால், மாநில ஆளுநர் அவர்களைப் பணிநீக்கம் செய்யலாம்.

### பணிகள்

மாநில மனித உரிமைகள் ஆணையம் ஆண்டு தோறும் அரசாங்கத்திற்குத் தனது அறிக்கையை அனுப்புகிறது. இவ்வறிக்கையில் தாம் செய்து முடித்த பணிகள் பற்றியும், அரசாங்கம் மனித உரிமைகளைக் காக்க எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கும். அரசாங்கம் இவ்வறிக்கையினைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யும்.

### மாவட்ட மனித உரிமைகள் நீதிமன்றங்கள்

மனித உரிமைகளைக் காக்க மாவட்ட அளவில் நீதிமன்றங்களை—மாநில அரசாங்கம் உருவாக்கி உள்ளது. மாவட்ட அளவில் நடைபெறும் மனித உரிமைகள் மீறல்களை இந்நீதிமன்றம் விசாரணை செய்யும். இந்நீதிமன்றத்தில் நீதிபதியாக ஏழு ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றியவர் அல்லது அரசு வழக்கறிஞர் நியமிக்கப்படுகிறார். இந்நீதிமன்றங்கள் விரைவாக மனித உரிமைகள் மீறல்களை விசாரணை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க வகை செய்கிறது.

### பெண்கள் உரிமைகள்

இந்திய அரசு சுதந்திரம் பெற்ற பிறகு பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அகற்ற பெண்களின் தரத்தை உயர்த்த பல்வேறு சட்டங்களை இயற்றியுள்ளது.

**1856** ஆம் ஆண்டு இந்து விதவை மறுமணச் சட்டம் சட்டபூர்வமாக்கப்பட்டது.

**1955** ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின்படி பெண்களின் திருமண வயதை **21** ஆக நிர்ணயம் செய்துள்ளது.

**1956** ஆம் ஆண்டு இந்து வாரிசுச் சட்டத்தின்படி தாய் தந்தையரின்

சொத்தில் பெண்களுக்குச் சமஉரிமை வழங்கப்பட்டது.

1961 ஆம் ஆண்டு வரதட்சணை தடைச் சட்டத்தின்படி வரதட்சணை வேண்டிப் பெண்களைக் கொடுமைப்படுத்துவது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகக் கருத வழி செய்தது.

தமிழக அரசு இந்துத் திருமண சட்டத்தில் 1967 ஆம் ஆண்டில் ஒரு திருத்தம் கொண்டுவந்து சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டபூர்வ திருமணங்களாக அங்கிகரித்துள்ளது.

1997 ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களைக் கேலிசெய்வதைத் தடுக்கச் சட்டம் இயற்றியுள்ளது. மேலும் 1999 ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களை இழிவுபடுத்தும் சுவரொட்டிகள் வெளியிடுவதைத் தடைசெய்துள்ளது.

இவ்வாறு பெண்களின் நலனைக் காக்க மத்திய அரசும் மாநில அரசும் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

## பெண் தொழிலாளர் நலச்சட்டம்

பணிபுரியும் பெண்களின் நலன் காக்க இந்திய அரசாங்கம் பல்வேறு சட்டங்களை இயற்றியுள்ளது. 1948 ஆம் ஆண்டு தொழிற்கூட சட்டம், 1951 ஆம் ஆண்டின் தோட்டத் தொழிலாளர் சட்டம், 1952இல் சுரங்கச் சட்டம் ஆகியவைகள் ஆண், பெண் வேறுபாடின்றி சமஊதியம் வழங்க வழிவகை செய்தது. 1961 ஆம் ஆண்டு பெண்களின் உடல் நலம் காக்க பேறுகாலப்பயன் சட்டம் இயற்றப்பட்டு, மகப்பேறு காலத்தில் பணிபுரியும் பெண்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மார்ச் 8 ஆம் நாள் சர்வதேசப் பெண்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

பெண்கள் உரிமையை உறுதி செய்ய 1995 ஆம் ஆண்டு சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் உலகப் பெண்கள் ஒன்று கூடி, “பெண்கள் உரிமைகள், மனித உரிமைகளே, மனித உரிமைகள் பெண்கள் உரிமைகளே” என முழக்கமிட்டனர்.

ஐ.நா. சபை 1978 ஆம் ஆண்டைச் சர்வதேசப் பெண்கள் ஆண்டாக அறிவித்தது.

## பெண்களின் அமைப்புகள்

பெண்களின் நலன்காக்க இந்தியப் பெண்கள் சங்கம், ஜனநாயக மாதர் சங்கம் மற்றும் பெண்ணுரிமை இயக்கம் ஆகியவைகள் போராடி வருகின்றன. இவை தவிர அரசுசாரா தன்னார்வ அமைப்புகளான அரிமா சங்கம், ரோட்டரி சங்கம், இன்னர்வீல் சங்கம் போன்றவைகளும் பெண்களின் நலனைக்காக்கப் பாடுபட்டுவருகின்றன.

## குழந்தைகள் உரிமைகள்

குழந்தைகளின் நலன் காக்க இந்திய அரசியலமைப்பு கீழ்க்கண்ட சட்டங்களை இயற்றியுள்ளது.

பிரிவு 39(F)இன் படி இந்திய அரசியலமைப்பு, குழந்தைகள் சுதந்திரமாகவும் உடல் ஆரோக்கியத்துடனும் வாழ வகை செய்கிறது. பிரிவு 45இன் படி அரசாங்கம் எல்லாக் குழந்தைகளுக்கும் 14 வயது வரை இலவசக் கட்டாய கல்வி வழங்கிட வழிவகை செய்துள்ளது. பிரிவு 24இன்படி குழந்தைத் தொழிலாளர் முறை தடை செய்யப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான அநீதிச் சட்டம் 1986 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு இளம்சிறார்கள் முறையாக

பாதுகாக்கப்படவும் அவர்கள் திருந்தி வாழவும் வழி செய்துள்ளது.

ஐ.நா. சபை 1979 ஆம் ஆண்டைச் சர்வதேசக் குழந்தைகள் ஆண்டாக அறிவித்துள்ளது.

இவ்வாறு குழந்தைகள் நலம் காக்க பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டும் குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைகள் இன்றும் புரையோடிய புண்ணாகவே உள்ளது. தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள், பருவ இதழ்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி குழந்தைத் தொழிலாளர் முறையினை முடிவுக்கு கொண்டுவர அரசாங்கம் முயன்று வருகிறது. பணிக்கு அனுப்பாதே! பள்ளிக்கு அனுப்பு! என்று அரசு கூறிவருகிறது.

ஒளிமயமான உலகினை உருவாக்க மனிதனோடு பிறந்த அவனது உரிமைகள் காக்கப்பட வேண்டும். மக்களும் அரசாங்கமும் இணைந்து செயல்பட்டால் நாளைய உலகம் ஒளிமயமானதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. __________ மனித உரிமைகள் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

   அ) டிசம்பர் 10 ஆ) டிசம்பர் 14 இ) டிசம்பர் 20

2. தேசிய மனித உரிமைகள் ஆணையம் __________ ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

   அ) 1990 ஆ) 1993 இ) 1998

3. மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களின் பதவிக் காலம் __________ ஆண்டுகள்.

   அ) 6 ஆ) 10 இ) 5

4. கி.பி.1995–ஆம் ஆண்டு உலகப் பெண்கள் __________ என்ற இடத்தில் கூடினர்.

   அ) பெய்ஜிங் ஆ) நியூயார்க் இ) புதுடெல்லி

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமையிடம் __________ உள்ளது.
2. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களை __________ மட்டுமே நீக்க முடியும்.
3. சர்வதேசப் பெண்கள் தினமாகக் கொண்டாடப்படும் நாள் __________ ஆகும்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| தேசிய மனித உரிமைகள் ஆணையம் | 1997 |
| மாநில மனித உரிமைகள் ஆணையம் | 1945 |
| ஐக்கிய நாடுகள் சபை | 1955 |
| இந்து திருமணச் சட்டம் | 1993 |

## IV) குறுகிய விடையளி.

1. மனித உரிமைகள் என்றால் என்ன ?
2. மனித உரிமைகள் மீறலைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?
3. வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளைக் கூறுக.
4. பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை அகற்ற நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களைக் கூறுக.

## V) விரிவான விடையளி.

1. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அதிகாரங்களையும் பணிகளையும் விளக்குக.
2. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் அதிகாரங்களையும் பணிகளையும் விளக்குக.

## உருவாக்க மதிப்பீடு

1. அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பாகச் செய்தித்தாள்கள், பருவ இதழ்களில் வெளியான செய்திகளைக் கத்தரித்து உன் துணுக்குப் புத்தகத்தில் ஒட்டவும்

2. பெண்கள் உரிமை மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் சுவரொட்டிகள் தயார் செய்க.

3. இந்தியாவில் யுனிசெப் (UNICEF) பங்கு குறித்து கட்டுரை எழுது.

## "என்னால் முடியும், நான் செய்தேன்"

## ('I can, I did')

### மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ.எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடுகள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |